
# திருமறை ஆசா

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்



வெளியிடுவோர்
கிறிஸ்துவின் சபை

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701
தமிழ்நாடு, இந்தியா
✆ 04257 - 230030, 230382 Cell : 98427 - 30382
E-mail : kangayamcofc @ eth.net




## ஆசானின் அறிவுரையிலே...


| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர் உரை | 1 |
| 2. | எக்லீசியா வேதாகமக் கல்லூரி ... | 9 |
| 3. | சுவிஷேசத்தை பிரசங்கித்தல் | 10 |
| 4. | பெண்கள் பகுதி | 14 |
| 5. | வாலிபர் பகுதி | 17 |
| 6. | சிறுவர் பகுதி | 20 |
| 7. | தீத்து ஒரு கண்ணோட்டம் | 22 |
| 8. | தேவனுடைய பரிசுத்த .... | 23 |
| 9. | வற்றாத நீருற்று | 28 |
| 10. | பொறாமை | 30 |

THIRUMARAI AASAAN

PUBLISHED BY CHURCH OF CHRIST

Editor
S. Rajanayagam

Honorary Editor
J.C. Choate

Dharapuram Road, Kangayam - 638 701, Tamil Nadu, India

*Pleading for the restoration of pure New Testament Christianity*

**Vol.17** **January - 2004** **Issue-1**

ஆசிரியர் உரை

# நிலைத்திருந்து வெற்றி பெறுங்கள்

**பூ**மிக்குண்டான இவ்வாழ்க்கையில் ஏற்றத்தாழ்வுகள் அதிகமில்லாமல் நிலைத்த ஒரு வாழ்க்கை, அதுவும் வெற்றியுடன் கூடிய ஒரு வாழ்க்கை அமைய வேண்டுமென்பது பொதுவாக எல்லோருக்குமே இருக்கும் ஓர் ஆசைதான். இப்படிப்பட்ட ஆசை கொண்டிருக்கும் ஒருவனை நாம் பேராசைக்காரன் என்று சொல்லிவிட முடியாது. ஒருவேளை, மனிதனுடைய ஆசை இப்படியிருந்தாலும், உண்மையில் இப்பூமியின் வாழ்க்கை எல்லோருக்கும் அப்படி இருப்பதில்லை. சொல்லப்போனால், யாருக்குமே அப்படியில்லையென்று கூட நாம் தைரியமாகச் சொல்லி விடலாம். ஏனெனில், தள்ளாட்டமும், தடுமாற்றமும், ஏற்றத்தாழ்வுகளுமற்ற ஒரு வாழ்க்கையை அல்லது கைகூடாதவைகளும், நிறைவேறாதவைகளும், தோல்விகளுமற்ற ஒரு வாழ்க்கையை நான் வாழ்ந்துகொண்டிருக்கிறேன் என்றோ அல்லது வாழ்ந்து முடித்துவிட்டேனென்றோ யாருமே சொல்லிவிடமுடியாது.

ஆயினும், ஸ்திரமான மற்றும் வெற்றியான வாழ்க்கைக்காக மனிதன் பெரும் முயற்சிகளை வாழ்க்கை முழுவதும் எடுத்து, அதை அடைவதற்காக பகீரதப் பிரயத்தனம் செய்கிறான். ஆம், மணிக்கணக்கில் அதைப்பற்றி சிந்திக்கிறான். நாள் கணக்கில் அதற்காகத் திட்டமிடுகிறான். மாதக்கணக்கில், வருடக்கணக்கில் அதற்காகப் பிரயாசை எடுத்து உழைக்கிறான். ஆனாலும், அடைய வேண்டியதை அவனால் அடைய முடிவதில்லை. பெரும்பாலும் அது கானல் நீராகவே இருக்கிறது. ஆகா அடைந்தாயிற்று அல்லது கிடைத்துவிட்டது என்பது போலிருக்கும். ஆனால், கிட்டி நெருங்கும்போது ஏமாற்றமே மிஞ்சி நிற்கும்! ஒரு வேளை, வாழ்க்கையின் சில கட்டங்களில், சிலதை சாதித்துவிட்டது போல நமக்குத் தெரிந்தாலும் ஒட்டுமொத்த வாழ்க்கையை கூட்டிக் கழித்துப்பார்த்தால், வாழ்க்கையின் நிலையற்ற தன்மையும், சந்திக்கும் தோல்விகளும் நிழல் போன்று நம்மைத் தொடர்ந்து கொண்டேயிருக்கிற தென்பதை முழுமையாக உணரமுடியும்.

மனிதனை இப்படி இறுகப் பிடித்து ஆதிக்கம் செலுத்தி கொண்டிருக்கும் வாழ்க்கைப் பிரச்சினைகளிலிருந்து ஒருவன் விடுபடுவதற்கு, இவனைப் போலவே அல்லல்பட்டுக் கொண்டிருக்கும் வேறொருவனிடம் செல்லுகிறான். ஞானமும், அறிவும் அதிகம் உள்ளவன் தன்னுடைய பிரச்சினைக்குத் தீர்வு கொடுக்க முடியுமென்று நம்பிச் செல்கிறான். அவனிடத்தில் காத்திருந்து ஆலோசனை கேட்கிறான். அவனுடைய ஞானத்தால் எழுதப்பட்ட புத்தகங்களை விலை கொடுத்து வாங்கிப் படிக்கிறான். அதனடிப்படையில் பயிற்சிகளையும், முயற்சிகளையும் மீண்டும் எடுக்கிறான். சில நேரங்களில் வெற்றியும் வந்து சேர்வது போல் தெரிகிறது. ஆனால் மீண்டும் சறுக்குகிறது. எப்படி எடைபோடும் கருவி கீழே இறங்கியவுடன், சடாரென சைபருக்கு வருகிறதோ அது போலவே ஜோராக கீழே வந்து விடுகிறது. அப்பொழுது ஒன்றும் புரியாமல், தலையைப்பிய்த்துக் கொள்கிறான். மண்டையை உடைக்கிறான். இப்படி இன்னும் ஏதேதோ செய்கிறான். ஆனாலும், மனித ஞானம் தேவனுக்கு முன்பாகப் பைத்தியமாயிருக்கிறது என்ற உண்மையை மாத்திரம் உணர்ந்து கொள்வதில்லை (I கொரி.1:20). மனித ஞானத்திற்கு ஓர் எல்லையுண்டு என்பது ஏனோ அவனுக்குப் புரியாத ஒன்றாகவே இருந்து வருகிறது.

ஆகவே, மனித ஞானத்திற்குள்ளாக நாம் மீண்டும் சென்று, எஞ்சியிருக்கிற இப்பூமியின் நாட்களை நிலையற்று, தோல்விகளோடு கழிக்கும் வழிகளைத் தேடாமல் யோசபாத் ராஜாவைக் கொண்டு தேவன், **நிலைத்திருந்து வெற்றி பெற** என்ன சொல்லுகிறார் என்று உன்னிப்பாக கவனித்து, அதன் மூலம் பயன்பெற முயற்சிப்போம். **"... யோசபாத் நின்று யூதாவே எருசலேமின் குடிகளே, கேளுங்கள்; உங்கள் தேவனாகிய கர்த்தரை நம்புங்கள், அப்பொழுது நிலைப்படுவீர்கள். அவருடைய தீர்க்கதரிசிகளை நம்புங்கள் அப்பொழுது சித்தி பெறுவீர்கள் என்றான்.**

உள்ளே செல்வதற்கு முன்பாக, யோசபாத் ராஜாவைக் கொண்டு, தேவன் இவ்வார்த்தைகளை எந்தச் சூழ்நிலையில் சொன்னார் என்பதைக் கொஞ்சம் தெரிந்து கொள்வோம்.

சாலொமோன் ராஜாவுக்குப் பிறகு பிளவுபட்டுப் போன இஸ்ரவேலின், தெற்கு ராஜ்யமாகிய யூதாவை ஆண்ட ராஜாக்களில் முக்கியமானவன் இந்த யோசபாத் ராஜா. இவன் யூதாவின் நான்காம் ராஜாவாயிருந்து, சுமார் இருபத்தைந்து ஆண்டுகள் அரசாட்சி செய்தான். தனது ராஜ்யபாரத்தின் ஒரு கட்டத்தில் தேவனுக்கடுத்த காரியத்தில் கொஞ்சம் தள்ளாடினாலும் (II நாள்.19.2.3) பிறகு சுதாரித்துக் கொண்டு தேவனுடைய பட்சத்தில் நின்று செயல்பட்டான். ஆசாவின் குமாரனாகிய இவன் யூதாவை ஆண்ட நல்ல ராஜாக்களில் ஒருவன். இயேசு கிறிஸ்துவின் ஜனனத்தின் வரிசையில் இடம் பெறும் பாக்கியமும் இவனுக்குக் கிடைத்துள்ளது. (மத்.1:8).

இந்த நல்ல ராஜா, ராஜ்யபாரம் செய்து கொண்டிருக்கும் நாட்களில், ஒரு சமயம் மோவாப் புத்திரரும், அம்மோன் புத்திரரும், அவர்களோடே

அம்மோனியருக்கு அப்புறத்திலுள்ள மனுஷரும் யுத்தத்திற்கு வந்தார்கள். (II நாளா 20:1) அப்பொழுது; யோசபாத் பயந்து, யூதாவெங்கும் உபவாசம் கூறுவித்த கையோடு, ஜனங்களுடன் சேர்ந்து தேவனிடத்தில் கெஞ்சி மன்றாடுகிறான் (வ.3-12). அந்த மன்றாட்டின் இறுதி வார்த்தைகளை தயவு செய்து கவனியுங்கள் **"எங்கள் தேவனே, அவர்களை நீர் நியாயம் தீர்க்க மாட்டீரோ? எங்களுக்கு விரோதமாக வந்த இந்த ஏராளமான கூட்டத்திற்கு முன்பாக நிற்க எங்களுக்குப் பெலனில்லை. நாங்கள் செய்ய வேண்டியது இன்னதென்று எங்களுக்குத் தெரியவில்லை. ஆகையால் எங்கள் கண்கள் உம்மையே நோக்கிக் கொண்டிருக்கிறது என்றான்"**.

இக்கட்டான நேரத்தில் அவன் ஏறெடுத்த இந்த மன்றாட்டும், இந்த மன்றாட்டில் இடம் பெற்றிருக்கும் வார்த்தைகளும், அவன் எப்படிப்பட்டவன் என்பதையும், அவன் ராஜாவாக இருந்த பொழுதிலும் தேவன் மீது எந்தளவு பயபக்தியுடன் இருந்துள்ளான் என்பதையும் நமக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. தமக்குப் பயப்படுகிறவர்களின் ஜெபத்திற்கு தன்னுடைய செவிகளை எப்போதும் திறந்து வைத்திருக்கும் தேவன் (சங்.31:15). இந்த மன்றாட்டைக் கேட்டு, யகாசியேல் என்னும் தேவ மனிதன் மூலமாகப் பேசினார். ஆம், சோர்ந்து போயிருக்கும் தமது பிள்ளைகளை தேற்றுவதில் எப்போதும் கவனமாக இருக்கும் நமது தேவன், மிகவும் ஆறுதலாக, அவர்களை தைரியப்படுத்தி நம்பிக்கையூட்டும் விதமாக இவ்விதம் பேசினார். "இந்த யுத்தத்தைப் பண்ணுகிறவர்கள் நீங்கள் அல்ல. யூதா மனுஷரே, எருசலேம் ஜனங்களே, நீங்கள் தரித்து நின்று கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள். பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள். நாளைக்கு அவர்களுக்கு எதிராகப் புறப்படுங்கள். **கர்த்தர் உங்களோடே இருக்கிறார்** என்றார். ஆம், கர்த்தர் அவருக்குப் பயப்படுகிறவர்களோடே இருக்கிறார். அவரையே தஞ்சம் என நோக்கிக் கெஞ்சுகிறவர்களுக்கு அவருடைய சித்தத்தின் படியாக உதவி செய்கிறார்.

கர்த்தர் யகாசியேலைக் கொண்டு பேசின நம்பிக்கையின் வார்த்தைகளுக்கு, யோசேபாத் ராஜாவும், சகல ஜனங்களும் தரை மட்டும் குனிந்து, தாழவிழுந்து, பணிந்து நன்றி சொல்லி, கெம்பீரமாய் துதித்தார்கள் (20:19) பிறகு அதிகாலமே எழுந்து, புதிய பெலத்தோடே, ஏராளமாயிருக்கிற எதிரிகளை எதிர்கொள்ளப் புறப்பட்டார்கள். அப்பொழுது தான யோசபாத் நின்று, **"... யூதாவே, எருசலேமின் குடிகளே, கேளுங்கள். உங்கள் தேவனாகிய கர்த்தரை நம்புங்கள். அப்பொழுது நிலைப்படுவீர்கள். அவருடைய தீர்க்கதரிசிகளை நம்புங்கள். அப்பொழுது சித்தி பெறுவீர்கள் என்றான்.** இவ்வசனத்தை கவனித்தால், **நிலைத்திருப்பதற்கும், வெற்றி பெறுவதற்கும்** சில காரியங்கள் சொல்லப்பட்டிருக்கிறதை நாம் அறியலாம்.

புதிய ஆண்டைத் துவக்கி சில வாரங்களை மாத்திரம் கழித்திருக்கும் நாம், இவ்வருடத்தில் நிலைத்திருப்பதற்கும், வெற்றி பெறுவதற்கும் ஆசை கொண்டிருக்கிறபடியால், இங்கே சொல்லப்பட்டிருப்பவைகளைக் கவனித்து நம்முடைய வாழ்க்கையிலும் அதின்படி செய்ய நம்மை ஒப்புக் கொடுப்போம்.

## I. யூதாவே, எருசலேமின் குடிகளே கேளுங்கள்

தேவன், யோசபாத்தைக் கொண்டு, இஸ்ரவேலர்களுக்குப் பேசின வார்த்தைகளிலிருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், **கேட்பது** மிகவும் அவசியம் என்பது.

இன்றைக்கு நாம் காண்கிற பொதுவான சீரழிவுகள் அத்தனைக்கும், ஆன்மீக அலங்கோலங்களுக்கும் அடிப்படைக் காரணம் கேளாமையே. ஒருவேளை தனிமனிதனாக இருந்தாலும், குடும்பமாக இருந்தாலும், சமுதாயமாக இருந்தாலும் அவர்களுக்கென்று சொல்லப்படும் ஆலோசனைகளைக் கேட்பது முக்கியம். குறிப்பாக, ஆன்மீக வாழ்க்கையில் "செவி கொடுப்பது" அதிக அவசியம். தேவன் தமது வசனங்களின் மூலம் இதை அதிகம் வலியுறுத்துக் கூறுகிறார்.

சபைச் சரித்திரத்தில் மூவாயிரம் பேரை இரட்சித்த முதல் பிரசங்கத்தை, பதினொருவரோடுங் கூட பேதுரு எழுந்து நின்று செய்த போது, "**.... யூதர்களே எருசலேமில் வாசம் பண்ணுகிற ஜனங்களே... என் வார்த்தைகளுக்குச் செவி கொடுங்கள்" என்றே ஆரம்பிக்கிறான்** (அப்.2:14). இன்னும், கிறிஸ்துவுக்கு முதல் இரத்த சாட்சியாக மரித்த ஸ்தேவானும், தன்னுடைய நீண்ட பிரசங்கத்தை ஆரம்பிக்கும் போது, "**... சகோதரரே பிதாக்களே கேளுங்கள்**" என்றே ஆரம்பித்துள்ளான்" (அப்.7:2). மேலும், பழைய ஏற்பாட்டின் காலத்தில், தேவன் சாமுவேல் தீர்க்கனைக் கொண்டு சொல்லும் வார்த்தைகள், கேட்பதின் அவசியத்தை மிக அழகாக எடுத்துக் கூறுகிறது. "... பலியைப் பார்க்கிலும், கீழ்ப்படிதலும், ஆட்டுக் கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் **செவி கொடுத்தலும் உத்தம்**" என்று அங்கே கூறியுள்ளார். பரலோகத்தின் தேவனுக்கு ஒருவன் உகந்தவனாக வாழ்வதற்கு அடிப்படையே செவி கொடுத்தல் தான்.

புகழ் மிக்க மறுரூபமலைக் காட்சியில், நியாயப் பிரமாணத்தின் தந்தையாகிய மோசேயோடும், தீர்க்கன்களில் பிரதானமானவனாகிய எலியாவோடும் இயேசுவானவர் காட்சி தந்தபோது, மேகத்திலிருந்து பிறந்த சத்தம் "**இவருக்குச் செவிகொடுங்கள்**" என்றே இருந்தது. அப்படியானால் "**கேளுங்கள், செவி கொடுங்கள்**" என்று வேதாகமம் அடித்து, அடித்துக் கூறுவதற்கு என்ன தான் காரணம் ? அப்போஸ்தலன் பவுலைக் கொண்டு இதற்கான பதிலைத் தேவன் தருகிறார். "**ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும்**" என்று (ரோம.10:17) கிறிஸ்தவ வாழ்க்கைக்கு அஸ்திபாரமாக இருக்கக் கூடிய "விசுவாசம்" கேட்பதினாலேயே வருகிறது. இந்த விசுவாசமே ஒருவனை உண்மையான இரட்சிப்புக்கு வழி நடத்துகிறது. ஆம், நமது இரட்சகர், தன்னுடைய பிரதான கட்டளையில், உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கம் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மத்.16:15,16) என்று தான் கூறியுள்ளார். **ஒருவன் இரட்சிக்கப்படுவதும், ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவதும் செவி கொடுக்கிற விதத்திலே தான் உள்ளது.**

ஆகையால், அருமையானவர்களே, **கேட்கிற** காரியத்தில் நாம் எப்படிப்பட்டவர்களாக உள்ளோம்? சிந்தித்துப் பார்ப்போம். ஆன்மீக காரியத்தில், "கேட்பது" நம்மை விசுவாசத்திற்கும், இரட்சிப்புக்கும் வழிநடத்தக் கூடியதாக இருக்கிறது. அந்த இரட்சிப்பு நமக்குப் பரலோகத்திற்குப் பாதை அமைத்துக் கொடுக்கிறது. மேலும், வேதாகமம், கேட்கிற காரியத்தில் நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டுமென்றும் சொல்கிறபடியால் (லூக்கா 8:18). நாம் கேட்கிற விஷயத்தில் கவனமாய் இருந்து "சத்தியம் என்ற பெயரில்" சொல்லப்படும் எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்ளாமல், பவுலடியார் சொல்லுவது போல, "எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து, நலமானதைப் பிடித்துக் கொள்வோம்" (I தெச.5:21)

## II கர்த்தரை நம்புங்கள்

தேவன், யோசபாத்தைக் கொண்டு பேசின வார்த்தைகளிலிருந்து நமக்குக் கிடைக்கிற இரண்டாவது பாடம், நம்முடைய வாழ்க்கையில் நாம் நிலைத்திருப்பதற்கு, சமாதான வாழ்வை அனுபவிப்பதற்கு **கர்த்தரை நம்ப வேண்டுமென்பது**

**"யூதாவே, எருசேலமின் குடிகளே, உங்கள் தேவனாகிய கர்த்தரை நம்புங்கள். அப்பொழுது நிலைப்படுவீர்கள்" என்று கூறுகிறார்.** வாழ்க்கையில் நிலைப்பட்டிருக்க வேண்டுமென்று எல்லோருமே விரும்புகிறோம். ஆனால், அப்படி நிலைப்பட்டிருப்பதற்குக் கர்த்தரை, கர்த்தரை மாத்திரம் நம்புங்கள் என்று சொல்லும் போது அப்படியே தடுமாறுகிறோம். இந்தத் தடுமாற்றம் இஸ்ரவேலர்களுடைய வாழ்வில் அதிகமாகவே இருந்தது. அநேக சமயங்களில், அவர்கள் அலைந்து திரிந்ததற்கும், எதிரிகளிடத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டதற்கும் காரணம், **கர்த்தரை நம்பாததே.** "என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்" (யாத்.20:3) என்ற பத்துக் கட்டளைகளில் முதல் கற்பனையையே அவர்கள் மறந்து போனார்கள். விளைவு? தேவன் அவர்களை மறந்தார். சகல இன்னல்களும் அவர்களைச் சுற்றி சுற்றி வந்தது.

II சாமு.22:31-ம் வசனம், "தம்மை நம்புகிற அனைவருக்கும் அவா கேடகமாயிருக்கிறார்" என்று கூறுகிறது. கேடகம் என்பது எதிரிகளின் தாக்குதலிலிருந்து ஒருவனைத் தற்காக்கும் ஆயுதம். கர்த்தரை நம்புகிறவர்களுக்கு அவர் கேடகம் என்பதன் பொருள், தன்னை நம்புகிறவர்களை சகலத் தீமையினின்றும் காப்பாற்றுகிறார் என்பதே. தேவன் கேடகமாய் இருக்கும் போது யார் என்ன செய்து விட முடியும்? (ரோம 8:31) சங்கீதம் 125:1, 'கர்த்தரை நம்புகிறவர்கள் என்றென்றைக்கும் அசையாமல் நிலைத்திருக்கும் சீயோன் பர்வதத்தைப் போலிருப்பார்கள்" என்று கூறுகிறது.

கர்த்தரை நம்புதல் சம்பந்தமாக, உபாகம புத்தகத்தில் நாம் கருத்தில் கொள்ள வேண்டிய வேறொரு உண்மையும் வெளியாக்கப்பட்டுள்ளது. அது தேவனை நம்ப வேண்டியவர்கள் நம்பாத போது, கிடைக்க வேண்டியவைகள்

கிடைக்காமல் போகுமென்பதே. அங்கே, தேவன் சொன்னவைகளை அவர்கள் நம்பாதபடியால், அவர்கள் பிதாக்களுக்குக் கொடுப்பேன் என்று அவர் ஆணையிட்டுக் கொடுத்த அந்த தேசத்தை அவர்களால் காண முடியாமல் போயிற்றென்று சொல்லப்பட்டுள்ளது (உபா.1:33-35). தேவன் சொன்னவைகளை விசுவாசியாதே போனபடியால், கானானைக் காணமுடியாமல் போனது உண்மையானால், தேவன் தமது குமாரன் மூலமாகக் கொடுத்துள்ள புதிய ஏற்பாட்டின் காரியங்களை விசுவாசியாமல், பரம கானானாகிய பரலோகத்தில் மாத்திரம் நாம் பிரவேசித்து விட முடியும்? நித்திய ஜீவனைக் கொடுப்பேன் என்று அவர் வாக்குத்தத்தம் செய்திருப்பது உண்மைதான் (I யோவா.2:25). ஆனால், யாருக்கு? அவரை நம்புகிறவர்களுக்கே. தேவனை ஒப்புக்குக் கூப்பிடுகிறவர்களுக்கல்ல (மத்.7:21)

ஆகவே, நம்முடைய வாழ்க்கையில், **கர்த்தரை நம்பி,** இம்மையில் தடுமாற்றமும், தள்ளாட்டமும் இல்லாத ஒரு நிலைத்த வாழ்வையும், மறுமையில் நித்திய ஜீவனையும் பெற்றுக் கொள்ள எல்லா முயற்சிகளையும் எடுப்போம்.!

## III அவருடைய தீர்க்கதரிசிகளை நம்புங்கள்.

தேவன், யோசபாத்தைக் கொண்டு பேசின வார்த்தைகளிலிருந்து நமக்குக் கிடைக்கும் மூன்றாவது பாடம், **நமது காரியங்கள் ஜெயமாவதற்கு நாம் தீர்க்கதரிசிகளை நம்பவேண்டுமென்பது.**

ஏராளமாயிருக்கிற எதிரிகளைச் சந்திப்பதற்கு, அவர்கள் அதிகாலையே எழுந்து புறப்பட்டுப் போகும் போது, தேவன், **நீங்கள் வெற்றி பெறுவதற்கு தீர்க்கதரிசிகளை நம்புங்கள்** என்று கூறுகிறார். ஏற்கனவே, தேவ மனிதனாகிய யாகசியேல், **கர்த்தர் உங்களுக்காக யுத்தம் செய்வார்** (வ17) ஆகவே, வெற்றி கிடைக்கும், நீங்கள் போங்கள் என்று சொல்லி விட்டான். ஆயினும், மீண்டும், சொல்லப்படுகிறது, "**தீர்க்கதரிசிகளை நம்புங்கள், அப்பொழுது சித்தி பெறுவீர்கள்**" என்று. இதன் பொருள், தொடர்ந்து வெற்றியாக அவர்கள் வாழ்வதற்கு", "தீர்க்கதரிசிகளை நம்ப வேண்டுமென்பதே

இஸ்ரவேலர்கள் வாழ்ந்த காலத்தில், அவர்கள் நம்புவதற்கும் அப்படி நம்புவதன் மூலம் வெற்றியடைவதற்கும், அநேக தீர்க்கதரிசிகள் இருந்தார்கள். நம்முடைய நாட்களில் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளைப் போன்ற தீர்க்கதரிசிகள் யாரும் இல்லை. அப்படியானால், நாம் நம்முடைய வாழ்க்கையில் வெற்றியடைய முடியாதா என்ற கேள்வி எழுகிறது. அப்படித்தானே, ஆனால், வெற்றி பற்றி நாம் எந்த சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை. உலகத்தை ஜெயித்தேன் என்றவர் வெற்றி கொடுப்பார். எப்படியெனில், பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளைக் காட்டிலும் மேலானவர் நமக்கு இருக்கிறார். அந்தத் தீர்க்கதரிசி பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் போல பூமியிலிருந்து வந்தவரல்ல. அவர் வானத்திலிருந்து நமக்காக வந்தவர்.

அவர் ஒரு தீர்க்கதரிசி என்பதை வேத வசனம் நமக்கு அழகாக அடையாளம் காட்டுகிறது.ஒருசமயம், தன்னுடைய ஊழிய நாட்களில், வேதபாரகர், பரிசேயர் போன்றவர்களின் கேள்விக்குப் பதிலளிக்கும் போது, **யோனாவிலும் பெரியவர் இங்கே இருக்கிறார்** (மாற்.12:41) என்று கூறுகிறார். வேறொரு சமயம், சமாரியா ஸ்திரீயோடு அவர் சம்பாஷணை நடத்திய போது, அவள் "**நீர் தீர்க்கதரிசி என்று காண்கிறேன்**" என்றாள் (யோவா.4:19). இவைகளுக்கு முத்தாய்ப்பு வைப்பது போன்று, மோசே வெகு காலத்துக்கு முன்பே, "உன் தேவனாகிய கர்த்தர் **என்னைப் போல் ஒரு தீர்க்கதரிசியை** உனக்காக உன் நடுவே, உன் சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணுவார். அவருக்குச் செவி கொடுப்பீர்களாக" என்று எழுதிக் கொடுத்துள்ளார் (உபா.18:15). ஒருவேளை, "என்னைப் போல்", என்று அவர் சொல்லியிருந்தாலும், உண்மையில் அவர் மோசேயைக் காட்டிலும் பெரியவராக உள்ளார். எப்படியெனில், மோசே தேவனுடைய வீட்டில் பணிவிடைக்காரன் என்றும், கிறிஸ்துவோ குமாரன் என்றும் சொல்லப்பட்டுள்ளது" (எபி.3:5,6). வேலைக்காரனுக்கும், புத்திரனுக்கும் உள்ள வேறுபாடு நமக்கு விளங்காத ஒன்றல்ல.

அப்பாடியானால், நம்முடைய நாட்களின் தீர்க்கதரிசியாகிய இயேசுகிறிஸ்து எவ்வளவு சிறப்பானவராக இருக்கிறார் என்று பாருங்கள். அன்றைக்கு வெற்றி பெறுவதற்கு அந்த தீர்க்கதரிசிகளில் வார்த்தைகள் அவ்வளவு முக்கியமானால், இன்றைக்கு நாம் சரீரத்திலும், ஆவியிலும் வெற்றியடைவதற்கு, இயேசுவானவரின் வார்த்தைகள் எவ்வளவு முக்கியமென்று அப்படியே எண்ணிப் பாருங்கள். "பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும், வகை வகையாகவும் தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்" (எபி.1:12).

இது உண்மையானால், கிறிஸ்துவாகிய தீர்க்கதரிசியின் வார்த்தைகள் இன்றைக்கு எவை? அவை எங்கே கிடைக்கும் என்ற நியாயமான கேள்வி எழுகிறது. அதற்குப் பதில், "**புதிய ஏற்பாடுதான் அவருடைய வார்த்தைகள்**" என்பதே. மறுரூபமலையில், "இவருக்குச் செவி கொடுங்கள்" என்று நமக்கு கட்டளை கொடுக்கப்பட்டிருக்கிறபடியால், நாம் அவருடைய உபதேசங்களுக்கு மாத்திரம் நம்மை ஒப்புக் கொடுக்க கடமைப்பட்டிருக்கிறோம். ஆகையால், பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்கும், புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசியாகிய கிறிஸ்துவின் வார்த்தைகளுக்கும் வேறுபாடு தெரியாமல், நாம் நம்மை குழப்பிக் கொள்ளக் கூடாது. அப்போஸ்தலன் பவுல், ரோமையருக்கு எழுதும் போது, "தேவவசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும், ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது". என்கிறார் (ரோம.15:4). ஆம், பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசியின் வார்த்தைகள் நாம் கற்றுக் கொள்ளும்படியாகவும், புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசியாகிய கிறிஸ்துவின் வார்த்தைகள் நம்மைக் கட்டுப்படுத்தும்படியாகவும் எழுதி

கொடுக்கப்பட்டுள்ளது. தேவனுக்குப் பிரியமான கிறிஸ்தவனாக வாழ்வதற்கு இந்த அடிப்படை உண்மையைத் தெரிந்து வைத்திருப்பது அவசியம். அப்படியானால், இந்த உண்மையை நான் தெரிந்து வைத்திருக்கிறேனா என்று நமக்கு நாமே கேட்டுக்கொள்ள வேண்டும். ஏனெனில்,கிறிஸ்துவின் உபதேசத்தைப் பற்றிய தெளிவு ஆன்மீக வாழ்க்கைக்கு மிகவும் அவசியம்.

கிறிஸ்துவின் உபதேசங்களடங்கிய புதிய ஏற்பாட்டு வார்த்தைகள் ஜீவனுள்ளதாயும் (யோவா.6:67), நமக்கு நித்திய ஜீவனைத் தருகிறதாயும் இருக்கிறது (யோவா.6:68) இதே யோவான். அவருடைய உபதேசம் நம்மைச் சுத்தமாக்குகிறது என்றும் கூறியுள்ளார் (யோவா15:3). அதைவிட முக்கியமாக, அவருடைய வார்த்தைகள் நம்மை நியாயந்தீர்க்கப் போகிறது என்றும் எச்சரித்துள்ளார் (யோவா12:48). கிறிஸ்துவாகிய தீர்க்கதரிசியின் வார்த்தைகள் தான் நம்மை நியாயந் தீர்க்கப் போகிறபடியால், அவருடைய உபதேசத்தைக் கேட்பதிலும், அதற்குக் கீழ்ப்படிவதிலும், அதன்படி வாழ்வதிலும் நாம் எவ்வளவு கவனமாயிருக்க வேண்டும் பாருங்கள்.

ஆகையால், அருமையானவர்களே, இந்தப் புதிய ஆண்டிலும், நாம் நிலைத்திருந்து, வெற்றியான ஒரு வாழ்க்கை வாழ்வதற்கு தேவன் கொடுத்த ஆலோசனைகளுக்குச் செவி கொடுத்து அதின்படி செய்வோமாக! ஆமென்.

**செ. ராஜநாயகம்**



# எக்லீசியா வேதாகமக் கல்லூரி

மாணவர் சேர்க்கை அறிவிப்பு

# EKKLESIA BIBLE COLLEGE

*P.O. Box - 27, Kangayam - 638 701. India.*

## STUDENTS ADMISSION NOTIFICATION

புதிய ஏற்பாட்டு உபதேசத்தில் முழு நம்பிக்கையும், நற்செய்தியை நானிலம் எங்கும் எடுத்துச் செல்ல வேண்டுமென்பதில் இணையில்லா ஈடுபாடும் கொண்ட வாலிபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் உடனடியாக வரவேற்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| **காலம்** | : | **3 வருடம்** (செமஸ்டர் முறை) |
| **Duration** | : | **3 Years (Semester System)** |
| **கல்வித் தகுதி** | : | **+2 தேர்ச்சி** (அல்லது) **பட்டப்படிப்பு** |
| **Qualification** | : | **+2 Pass (or) Any Degree** |
| **பட்டம்** | : | **வேதயியலில் இளங்கலை பட்டம்** |
| **Degree** | : | **B.B.S. (Bachelor of Biblical Studies)** |

**தகுதியுள்ளவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படும்.**

விபரங்கட்கும், விண்ணப்பங்களுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

இயக்குநர்

**எக்லீசியா வேதாகமக் கல்லூரி,**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701. இந்தியா

✆ : (04257) 230030,

Cell : 98427 - 30382.

# சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல்

இயேசு கிறிஸ்து சொன்னார், "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைகொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார்" (மத்28:19,20)". அவர் மீண்டுமாக "பின்பு, அவர் அவர்களை நோக்கி : நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் என்றார் (மாற்கு 16:15,16)".

**இந்த வசனங்களிலிருந்து அநேக காரியங்களை நாம் கவனிக்க வேண்டும்:**

1. இயேசு தமது அப்போஸ்தலர்களைப் போகும்படி கட்டளையிட்டார். ஆண்டவர், போங்கள் என்று மாத்திரம் சொல்லாமல், எங்கே போக வேண்டுமென்பதையும் சொன்னார். அவர்கள் உலகத்திற்குள் போக வேண்டுமென்றும், உலகத்திலுள்ள அனைத்து தேசத்திற்கும் போக வேண்டுமென்றும், உலகின் எல்லா தேசத்திலும் உள்ள அனைத்து சிருஷ்டியினிடத்திற்கும் போக வேண்டுமென்றார். அந்த நாட்களில் இது மிகவும் கஷ்டமான கட்டளையாகவே இருந்தது. அதுவும் நமக்கு இருக்கும் தொலைதொடர்பு, மற்றும் வாகன வசதிகளை நினைக்கையில் இது நமக்கு நன்றாகவே விளங்கும், ஆனாலும் கூட இது ஆண்டவரின் கட்டளையாக இருக்கிறது. அவர் நம்மால் செய்ய முடியாததைச் செய்யும்படி சொல்லமாட்டார்.
2. இயேசு, தமது அப்போஸ்தலர்களை,போய் பிரசங்கியுங்கள் என சொன்னார். அப்படி பிரசங்கிக்கும்படி சொல்லும்போது எதை பிரசங்கிக்க வேண்டும் என்பதையும் அவர் தெளிவாகச் சொன்னார். அவர் சுவிசேஷத்தை பிரசங்கிக்கும்படி சொன்னார். இந்த கருத்தை அவர்கள் புரிந்து கொள்வதில் தவறு நடக்கக் கூடாது என்பதில் அவர் அவரைக் கொண்டு, "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் என்றார் (மாற் 16:16)"
3. இயேசு தன்னுடைய அப்போஸ்தலர்களிடம், சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிய விரும்புகிறவர்களுக்கு நீங்கள் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டுமென்றும் சொன்னார். உலகமெங்கும் சுவிசேஷத்தை எடுத்துச் செல்லும் பொறுப்பை, அப்போஸ்தலர்களிடம் ஆண்டவர் ஒப்படைத்தார். ஜனங்கள் சுவிசேஷத்திற்கு கீழ்படிந்தார்களா?

என்பதையோ அல்லது மற்ற அநேககாரியங்களை பற்றி அவர்கள் சரிபார்க்க வேண்டியதில்லை. அவர்கள் பார்க்க வேண்டியது சுவிசேஷம் எல்லாருக்கும் அறிவிக்கப்படுகிறதா என்பதுதான். அந்த பொறுப்பை நிறைவேற்றின பின்பு, பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷத்தைக் கேட்டு கீழ்ப்படிய விரும்புகிறவர்களுக்கு, ஞானஸ்நானம் கொடுக்கப்பட வேண்டும் என்று கர்த்தா சொல்லுகிறார். இன்னும் ஒருபடி மேலே சென்று ஞானஸ்நானம் எவ்விதமாகக் கொடுக்கப்படும் என்பது பற்றி, சொல்லும்போது, "அவர்களுக்கு பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஞானஸ்நானங் கொடுத்து" (மத் 28:19) என்றார். மீண்டுமாக எந்தத் தவறான புரிந்து கொள்ளுதலும் இருக்கக் கூடாது என்பதில் அவர் கவனமாக இருந்தார்.

இறுதியாக, சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிகிறவர்கள், தொடர்ந்து போதிக்கப்பட வேண்டுமென்று இயேசு கட்டளையிட்டார். மீண்டுமாக கவனியுங்கள், உலகமனைத்திற்கும் போய் சுவிசேஷத்தை அனைவருக்கும் பிரசங்கித்து, ஆண்டவருக்கு கீழ்ப்படிய விரும்புகிறவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டுமென்பது இயேசுவின் கட்டளையாகும். இது செய்யப் பட்டவுடன் மற்றொரு பொறுப்பு நமக்கு வருகிறது. அதையும் நாம் இயேசுவின் வார்த்தைகளில் காணமுடியும். "நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார்". (மத் 28:20). சுவிசேஷத்தின் மூல உபதேசத்தைக் கற்றவர்கள் ஆவிக்குரிய ரீதியில் மரித்துப் போகும்படி விட்டுவிடாமல் கிறிஸ்துவ வாழ்க்கை வாழ்வது எப்படி என்பதைக் குறித்து அவர்களுக்கு தொடர்ந்து போதிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. இந்த வகையாகவே அவர்களுடைய முதற்கட்ட இரட்சிப்பைப்பற்றி மாத்திரம் இயேசு கவலைப்படாமல் அவர்கள் நித்திய இரட்சிப்பைப் பெற வேண்டுமென்பதில் கவனமாயிருந்திருக்கிறார். அவர்கள் விசுவாசமுள்ள கிறிஸ்துவ வாழ்க்கை வாழ வேண்டுமென்று விரும்பி, அவர்களுக்கு தொடர்ந்து போதிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்.

நாம் மேலே கண்டதை பிரதான கட்டளையென்று பொதுவாக அழைக்கிறோம். ஆத்தும இரட்சிப்புக்கும், இவ்வுலக இரட்சிப்புக்கும் சுவிசேஷத்தின் செய்தி பிரதானமாயிருப்பதால் இதை நாம் இப்படியழைப்பதுண்டு. ஆனால் நாம் தொடர்ந்து அந்த பிரதான கட்டளையை நிறைவேற்ற கர்த்தர் என்ன திட்டத்தை வகுத்தார் என்பதையும் கவனிக்க வேண்டும். அப் 1:8ல் சுவிசேஷமானது பூலோக ரீதியாக பரவ வேண்டுமென்று அவர் திட்டம் தீட்டினார். அப்போஸ்தலர்களுக்கு கட்டளையிட்ட நம் ஆண்டவரின் வார்த்தைகளைக் கவனியுங்கள். "பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்" (அப் 1:8). அப்போஸ்தலர்

நடபடிக்கைகளை நாம் படிக்கும்பொழுது இது அப்படியே நிறைவேறிற்று என்பதைக் காணமுடியும். இதை நாம் கிட்டேபோய் பார்ப்போம்.

I. எருசலேமில் ஆரம்பித்து சுவிசேஷம் பிரசங்கிக்க வேண்டியதாயிருந்தது. அப் 1, 2 அதிகாரங்களை நாம் கவனிக்கும் பொழுது அப்போஸ்தலர்கள் எருசலேமிலே இருக்கிறார்கள். பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தது. உலகமனைத்திலும் இருந்து யூதர்கள் அங்கு கூடி வந்தார்கள். பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்கள் மீது பொழிந்தருளி, இதுவரைக்கும் கற்றிராத மொழிகளை அங்கிருப்பவர் புரிந்து கொள்ளும்படி பேசினார்கள். அன்றைக்கு முதல்முதலாக சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது. அதன்முடிவாக ஏறக்குறைய மூவாயிரம் பேர் அப்போஸ்தலர்கள் சொன்ன வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டு ஞானஸ்நானம் பெற்று சபையிலே சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். இந்த காலக்கட்டத்திலிருந்து சுவிசேஷம் பரவ ஆரம்பித்தது.

இங்கே நாம் கர்த்தருடைய ஞானத்தை அறிந்துகொள்ள முடியும். உலகமனைத்திலுமிருந்து வந்திருந்த ஜனங்கள் கூடியிருக்குமிடத்தில் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது. அப்படி கூடிவந்த ஜனங்கள், தங்கள் சொந்தஊர் திரும்பும் பொழுது தாங்கள் கீழ்ப்படிந்த சுவிஷேசத்தைப் பற்றி மற்றவர்களிடம் கூறுவதற்கு வாய்ப்புகள் அதிகமாயிருந்தது. உதாரனமாக அப் 2ம் அதிகாரத்திலே ரோமாபுரியிலிருந்து வந்த சிலரைக்குறித்து வாசிக்கிறோம். அதற்குப் பின்பாக அப்போஸ்தலன் பவுல் அங்கே போவதற்கு முன்பே சபை அங்கே இருப்பதாக வேதத்திலே நாம் வாசிக்கிறோம். பேதுருவோ, மற்ற அப்போஸ்தலர்களோ அங்கு போனதாக ஆதாரம் இல்லை. ஆகவே ரோமாபுரியிலே சபை ஆரம்பிக்கப்பட்டதற்கு ஒரு காரணமாக இதைச் சொல்லாம். ரோமாபுரியிலிருந்து எருசேலம் வந்திருந்திருந்தவர்கள் சுவிசேஷத்தைக் கேட்டு அவர்கள் சொந்த ஊர் திரும்பிய பின் தங்கள் சொந்த ஜனங்களுக்கு உபதேசித்து, இப்படியாக சபையை ஆரம்பித்திருக்கிறார்கள் என்று செல்லலாமல்லவா?

II. யுதேயா முழுவதும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட வேண்டியதாயிருந்தது. எருசலேமைச் சுற்றியிருக்கின்ற இடங்களான யூதேயா பட்டணத்துக்கு இயேசு சென்றிருந்தார். ஆகவே அங்கேயிருந்த ஜனங்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதிலே எந்தவொரு பிரச்சனையுமில்லை. எருசலேமிலும், யூதேயாவிலும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டதை நாம் வாசிக்க முடியும். இதற்குப் பின்பு ஸ்தேவானுடைய மரணத்தைப்பற்றி வாசிக்கிறோம். (அப் 8:1). "அவனைக் கொலை செய்கிறதற்குச் சவுலும் சம்மதித்திருந்தான். அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. அப்போஸ்தலர் தவிர, மற்ற யாவரும் யூதேயா, சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப்போனார்கள்" சிதறிப்

போனவர்களைப் பற்றி நாம் வாசிக்கையில் "சிதறிப் போனவர்கள் எங்குந்திரிந்து சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள்". ஆகவே சுவிசேஷம் யூதேயா எங்கும் பரவியது (அப் 8:4)

III. சுவிசேஷம் சமாரியா நாட்டு ஜனங்களிடத்திற்கு கொண்டு போகப்பட்டது. "அப்பொழுது பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப் போய் அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தான். பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் கேள்விப்பட்டு கண்டு, அவனால் சொல்லப்பட்டவைகளை ஒருமனப்பட்டுக் கவனித்தார்கள்". (அப் 8:5,6). "தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசுகிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது, புருஷரும், ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப் 8:12). பேதுருவும், யோவானும் சமாரியாவுக்குச் சென்ற பின்பு வேதாகமம் சொல்லுகிறது, "இவ்விதமாய் அவர்கள் கர்த்தருடைய வசனத்தைச் சாட்சியாய் அறிவித்துச் சொன்னபின்பு, சமாரியருடைய அநேக கிராமங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, எருசலேமுக்குத் திரும்பி, வந்தார்கள்" (அப் 8:25). இப்படியாக சமாரியருக்கும் சுவிசேஷம் சென்றடைந்தது.

IV. கடைசியாக உலகமெங்கும் சுவிசேஷம் சென்றடைந்தது. இதை நிரூபிக்கும்படியாக அப்போஸ்தலனாகிய பவுல் "அந்த சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது." அதற்கென்றே பவுலாகிய நான் ஊழியக்காரனானேன்." (கொலோ 1:23) என்கிறார். ஆகவே உலகமனைத்தும் சுவிசேஷம் கொண்டு செல்லவேண்டுமென்ற கட்டளை 30 வருடத்திற்குள் நிறைவேறியது.

இன்றைக்கு நாம் என்ன செய்யவேண்டுமென கர்த்தர் எதிர்பார்க்கிறார். நாமும் அவர்களைப் போலவே செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறார். நாம் உலகமெங்கும் செல்ல வேண்டும். சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும். அன்றைக்கு இருந்தவர்களைவிட இன்று உலகில் அநேகர் இருப்பதால், இது நமக்கு சவாலாகவே இருக்கும். ஆனாலும் நவீன வசதிகள் நமக்கிருக்கும் இந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதில் உதவி செய்யும். கர்த்தர் அந்த பொறுப்பை நம்மிடத்திலே கொடுத்திருக்கிறார், ஆகவே நாம் அதைச் செய்ய வேண்டும். நாம் செய்யமுடியாததை அவர் ஒரு போதும் கொடுப்பதில்லை.

இவ்வுலகுக்கு கிறிஸ்துவின் சுவிசேஷம் அவசியமாயிருக்கிறது. அதுவே உலகின் நம்பிக்கையாயிருக்கிறது. அது மாத்திரமே இவ்வுலகத்தை மாற்றவும் அதற்கு உதவவும், அதை இரட்சிக்கவும் முடியும். ஆகவே சுவிசேஷத்தை நம் கைகளில் வைத்திருக்கிற நாம் அதை உலகமெங்கிலும் எடுத்துச் செல்வது அவசியம்.

**J.C. Choate** **ஜே.சி. சோட்.**

# பெற்றோரின் மதத்தை மட்டும் நான் பின்பற்றுவேன்

இன்றைய மத உலகை நாம் கவனித்தால், கிறிஸ்தவம், யூதமதம், இந்து மதம், புத்தமதம், இஸ்லாம், டோயிசம், ஜொராஸ்டீரியனிஸம் போன்ற மதங்களும், கத்தோலிக்க மற்றும் புராட்டஸ்டண்ட் போன்ற பிரிவுகளும், அவைகளில் எவை வேண்டுமானாலும் ஒருவன் தெரிந்து கொள்ள உரிமையும், தாராளமாக இருக்கிறதை அறியலாம். ஒவ்வொரு மதமும், தங்களுக்கென்று வித்தியாசமான கடவுள், வேறுபட்ட கோட்பாடுகள், வேறுபட்ட தொழுகை முறைகள், ஒருவனின் பாவ நிவர்த்திக்கான மாறுபட்ட முறைகளை கையாளுதல் போன்றவைகளை கடைபிடித்து வருகின்றது. இப்படியிருக்கையில், எந்த மதம் உண்மையாகவே தேவனிடத்திலிருந்து வந்தது? எதை ஒருவன் உண்மையில் வேண்டுமென்ற குழப்பம் வந்து சேருகிறது.

இந்த மாதிரி சில குழப்பமான வினாக்களை சந்திக்க மறுத்து, பெரும்பாலான மக்கள் என்ன செய்கிறார்களென்றால், “நான் பெற்றோர் பின்பற்றும் மதத்தையே பின்பற்றுவேன், அவர்களுக்கு எது சரியாகப்பட்டதோ அது எனக்கும் சரி என்று முடிவு செய்து விடுகின்றனர்”.

ஆனால், மார்க்க விசயத்தைப் பொறுத்த மட்டில் பெற்றோர் எதை பின்பற்றினார்களோ அதையே ஒரு ஸ்திரீ பின்பற்றினால் அது அவளுடைய ஆவிக்குரிய வாழ்விற்கு பாதுகாப்பாக இருக்குமா? தங்கள் பெற்றோரையும், பெற்றோரின் விசுவாசத்தையுமே பின்பற்றி, உண்மை எது என்பதை ஒருபோதும் கண்டுபிடிக்காதவளாய் இருந்தால் அது அவள் பங்கிலே குற்றமாகாதா?

முற்பிதாவாகிய ஆபிரகாமின் தகப்பனும், அவன் தாத்தாவும் வேறே தேவர்களை சேவித்துக் கொண்டிருந்த போதும், ஆபிரகாம் தன் குடும்ப பாரம்பரியத்தை விட்டு விட்டு பரலோகத்தின் தேவனை சேவிக்க முடிவு செய்து பிரிந்து வந்து விட்டான் (யோசுவா 24:2) என்பதை வேதாகமத்தின் வாயிலாக நாம் அறிகிறோம். தன் முன்னோர்களின் மதத்தை விட்டு பிரிந்து வந்த மற்றொரு நபரை நாம் வேதத்தில் பார்த்தால், அவர் தான் அப்போஸ்தலனாகிய பவுலடியார். அவர் அப.23:1ல் கூறும் போது, “சகோதரரே, இந்நாள் வரைக்கும் எல்லா விஷயங்களிலும் நான் நலமனச் சாட்சியோடே தேவனுக்கு முன்பாக நடந்து வந்தேன் என்று சொன்னான்”. மேலும், “முன்னே நானும் நசரேயனாகிய இயேசுவின் நாமத்திற்கு விரோதமாய் அநேக காரியங்களை நடப்பிக்க வேண்டுமென்று நினைத்திருந்தேன் (அப்.16:9) என்கிறார். ஆனால், கிறிஸ்து தேவனால் அனுப்பப்பட்ட மேசியாவாகவே தன்

முன்னோர்களால் அறியப்பட்டிருந்தார் என்பதை அறிந்தவுடன், யூதமதத்தை விட்டு கிறிஸ்தவனாக மாறினான்.

நீதி 14:12ல் பார்க்கும் பொழுது "மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு, அதின் முடிவோ மரண வழிகள்" என்று எச்சரிக்கிறது. நமக்கென்று ஆத்துமாவை பெற்றிருக்கிற நாம் தேவனுக்காக எந்தமாதிரியான வாழ்வை வாழப் போகிறோம் என்பதற்கு நாமே பொறுப்பாளிகள். ஏதோ ஒரு மதத்தை பின்பற்றிக் கொண்டு தங்கள் நம்பிக்கையில், தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டிருப்பதெல்லாம் சரியானதல்ல. இயேசு கூறினார், "அந்நாளில் அநேகர் என்னை நோக்கி : கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்க தரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை, அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்" என்றார். இதைக் கூறிவிட்டு அடுத்த வசனத்தில் இப்படியாகச் சொல்கிறார். "ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ,....".

"நாம் போதிக்கப்பட்டிருக்கிறோம்", வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக,

அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜன முள்ளவைகளாயிருக்கிறது" (II தீமோத்:3:16,17).

வேத வாக்கியங்கள் தேவ ஆவியால் அருளப்பட்டிருப்பதாலும், அது ஆன்மீகக் காரியங்களில் வழி காட்டுகிறதாய் இருக்கிறபடியினாலும், நாம் இவ்வாறாக தூண்டப்படுகிறோம். "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும், சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு". (2 தீமோத்.2:15) இதை வேறுவிதமாய்க் கூறினால், "உனக்கு அங்கீகாரம் வேண்டுமானால் வேதத்தைப் படி".

இந்த வசனப் பகுதிகளிலிருந்து நாம் எதைத் தெரிந்து கொள்ள முடியும் என்றால், நாம் நம் பெற்றோர்கள் எதைத் தழுவுகிறார்களோ அதை நாமும் குருட்டுத் தனமாக செய்ய நம்மை உட்படுத்தலாகாது. ஏனென்றால், ஒருவேளை அவர்கள் தங்கள் பெற்றோரின் வழிமுறைகளை கையாண்டிருந்திருப்பார்கள். மாறாக, நம் ஆத்துமா நலனைக் குறித்து நாம்

போதுமான அளவு அக்கறை கொண்டிருக்க வேண்டும் - நம்முடைய சந்ததியின் ஆத்துமாக்களுக்கும் நம்முடைய மாதிரி ஒரு தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாய் இருக்க வேண்டும். பல பிரிவினைகள் அவற்றின் கோட்பாடுகள் இவைகளையெல்லாம் படித்து சரியானது எது என்று கண்டுபிடிக்க வேண்டும். உண்மையைத் தேடி அலைய வேண்டும். அதைக் கண்டுபிடித்தவுடன் தைரியமாய் அதை பின்பற்ற வேண்டும். பெற்றோர்கள், பாரம்பரியம், அவர்களின் தவறான நம்பிக்கை போன்றவற்றைக் கடந்து வெளியே வரவேண்டும்.

சத்தியத்தை தேடுவதைப் பற்றி இயேசு கிறிஸ்து இந்த பூமியில் வாழ்ந்த காலத்தில் கூறும் பொழுது, மேலும், பரலோக ராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான்" என்றார் (மத்தேயு:13:45,46). இந்த மனிதன் விலையுயர்ந்த முத்தைப் பெற்றுக் கொள்ள தனக்குண்டான எல்லாவற்றையும் இழக்க வேண்டியதாய் இருந்தது. சத்தியம் என்பது முத்தைக் காட்டிலும் விலையுயர்ந்தது. அதற்காக என்னவிலையாயினும் கொடுக்க தவறக்கூடாது. நாம் தேவையான எந்த மாற்றத்தை வேண்டுமானாலும் செய்து அந்த சத்தியத்தை அடைந்து கொள்ள வேண்டும்.

நம்முடைய பெற்றோர் நம்பின, பழகிப் போன காரியங்கள் அவர்களுடைய அறிவு, சந்தர்ப்பங்கள் இவைகளுக்கு ஒருவேளை சரியாய்த் தோன்றியிருந்திருக்கும். ஒருவேளை, அவர்கள் சரியாய் செய்தது போல் தோன்றினாலும், அவர்கள் செய்திருக்கக் கூடும். ஆனால், நாம், நம்முடைய ஆத்துமா நமக்கு முன செய்திருந்தவர்களைப் பார்த்து கண்மூடித்தனமாக பின்பற்றிப் போக முடியாது. உண்மையுடனும் ஆழ்ந்த இடைவிடாத வேத வாசிப்பு, இவைகளோடு கூட உண்மை சத்தியத்தை கண்டுபிடிக்க தேவன் உதவி செய்யும்படி அவரை நோக்கி ஏறெடுக்கும் ஜெபம், இவைகளின் மூலம் தவறு எது? சத்தியம் எது? என்று கண்டுபிடிக்கலாம். தேவனுக்காகவும், நமக்காகவும் எல்லாவற்றிற்கும் மேலாக சத்தியத்துக்கு நம்மை ஒப்புக் கொடுப்பதும் நம்மேல் விழுந்த பொறுப்பாகும்.

பெற்றோர் சென்ற வழியே நானும் செல்கிறேன். தேவன் எது உண்மையென்று சொல்கிறாரோ அதை படித்து அறிந்து கொள்ள விருப்பமில்லையென்றிருப்போமானால், நித்திய வாழ்வைப் பெற்றுக் கொள்ள நம்முடைய ஆத்துமாவை சிரமத்திற்குள்ளாக்குகிறோம். இந்த கேள்வியை நாமே நமக்குள் கேட்டுப் பார்ப்போம். வசனத்தின் வெளிச்சத்தில் முடிவெடுப்போம்.

**மேரி டீ பால்மா** **ரேச்சல் இராஜநாயகம்.**

# உள்ளது உள்ளபடி...

நேர்மை என்கிற குணசீலம் காண்பதற்கரியதாகவும், குவலயத்துக் குடிகளுள் சல்லடை போட்டு சலித்துப் பார்த்தாலும் கிட்டாப் பொருளாக, எட்டா உயரத்திலிருக்கிறதென்பதையும் நாம் உணர முடியும். மனமெனும் திரைச்சிலை மனிதனுக்கிருப்பதால், அகம் ஒன்றை அசை போட்டாலும், முகம் வேறொன்றை சொல்ல முயல்வதை வழக்கமாக கொண்டுள்ளான். உள்ளதை உள்ளபடியே உரைப்பதில் மனிதனுக்கு மிக உயரமான சிரமங்கள் சிகரங்களைப் போலிருப்பது உண்மையாய் இருப்பினும், அநேகமாக அனைவரது வீட்டிலுமிருக்கும் ஒரு பொருள், தனக்கு முன் ஒன்று வைக்கப்பட்டாலோ அல்லது வந்து நின்றாலோ, வைக்கப்பட்டதும் வந்து நின்றதும் எப்படி இருக்கிறதோ அதை அப்படியே, காட்டும் என்பதை அறிந்திருப்போம். ஆம், கதிரவன் தோன்றும் காலையானாலும், சிரசின் மேல் சூரியன் சுட்டெரிக்கும் மதியமானாலும், பொழுது சாய்ந்து மாலை மயங்கும் வேளையானாலும், நம்மை உள்ளபடியே காட்டும் கண்ணாடி தான் அப்பொருள் என்பதை நாமறிவோம்.

பாவ இருளில் சிக்கி திக்கு தெரியாமல் தவிக்கும் ஒருவனுக்கு பரலோக பாதையைக் காட்டும் தீபமாக திகழுகிற விவிலியம், இறைமகனின் தியாகத்தை கொண்டு கல்லான மனதையும் உடைக்கும் சம்மட்டியாக விளங்குகிற இம்மறை நூல், தேவனின் குடும்பத்து அங்கமாக புதிதாக மாறிய குழந்தைக்கு பாலாக இருக்கிற திருவசனம், மனதின் அவசியமற்ற சிந்தனையை வெட்டி எறியும் வாளாக விளங்குகிற ஆவியின் பட்டயம், மனிதனின், உள்ளான மனதை, உள்ளத்தை உள்ளபடியே காட்டும் கண்ணாடியாகவும் அமையப் பெற்றிருக்கிறது என்று யாக்கோபு தனது நிருபத்தில் யாத்துக் கொடுத்திருக்கிறார் (யாக். 1 ;23 – 25) எனக்கன்பான வாலிபர்களே, பொதுவாக மனிதன் கண்ணாடியைப் பார்க்கும் போது மூன்று விதமாக நடந்து கொள்ளுகிறான் என்று கண்டு நாம் எப்படி நடக்கிறோம் என்பதை சீர்தூக்கிப் பார்க்க இப்புதிய ஆண்டில் முயற்சிக்க வேண்டுமெனக் கருதி இம்முயற்சி செய்கிறேன்.

## பார்த்த உடன் மறக்கிறோம்

மனிதனின் மனது மறதிகுணமுள்ளது என்பது அனைவரும் அறிந்த ஒன்றே, கண்ணாடியில் பார்க்கிற தனது வதனத்தை, அதாவது முகத்தை, வெகு குறைவான நேரத்திற்குள் மறந்து விடுகிறான் மண்ணான மனிதன்.

இதைத் தான் யாக்கோபு எழுத்தாளன், "..... ஒருவன் திருவசனத்தைக் கேட்டும், அதன்படி செய்யாதவனானால், கண்ணாடியிலே தன் சுபாவ முகத்தைப் பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாயிருப்பான். அவன் தன்னைத் தானே பார்த்து, அவ்விடம் விட்டுப் போனவுடனே, தன் சாயல் இன்னதென்பதை மறந்து விடுவான் (யாக் 1: 23, 24) என்கிறார். முதலாவதாக, திருவசனம் நம்மை நோக்கி வரும் போது, அது நம்மை யாரென்று காட்டும் போது, அதைப் பார்க்கிற நாம், நம்மை சீர் செய்ய மறக்க முடியும், மறுக்கவும் முடியுமென காண்கிறோம்.

தமஸ்குவின் சாலையில் சர்வவல்லவரின் திருக்குமாரனை சந்திக்க நேர்ந்த பவுல், பரமனுக்காக பாரார் அனைவருக்கும் பாகுபாடின்றி சுவிசேஷத்தை அறிவித்தான். அதற்காக சில யூதர்களின் எதிர்ப்பையும் சந்தித்தான், மதத்தலைவரின், மதம் பிடித்த தாக்குதலுக்கு உள்ளானான். அப்படி, தன்னை சிருஷ்டித்தவருக்காய் சிறையிலிருக்கையில், பேலிக்ஸ் என்னும் அதிபதிக்கு முன் நின்று, த்ன்னுடைய நம்பிக்கையைக் குறித்து சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்லலானான். அப்படி, சொல்லும் போது பேலிக்ஸ் என்னவெல்லாம் கேள்விப்பட்டான் என ஒரு கணம் என்னோடு சேர்ந்து படியுங்கள் எனக்கன்பானவர்களே.

சபை சரித்திர புத்தகமாகிய, அப்போஸ்தலன் நடபடிகள் 24ம் அதிகாரத்தில் கனம்பொருந்திய பேலிக்ஸ் முன்பு, பவுலடியார் நிற்கிறதைக் காண்கிறோம். அப்பொழுது பவுல் தனக்காக பேசும் படி கேட்டுக் கொள்ளப்பட்ட போது, என்ன காரியங்களை பற்றி பேசுகிறார் என்பதை தயவு கூர்ந்து கவனியுங்கள். முதலாவது, தான் பின்பற்றுவது மதபேதம் அல்ல, அது இறை மார்க்கம் எனச் சொன்னான் (14), அந்த மார்க்கத்தின் மூலம் தேவனை ஆராதிப்பதாகவும், தான் தீர்க்கதரிசனங்களையும், நியாயப் பிரமாணத்தையும் விசுவாசிக்கிறதாகவும் அதே வசனத்தில் கூறுகிறார். பின்பு மரித்தோரின் உயிர்த்தெழுதல், தேவன் பேரில் நம்பிக்கை மற்றும் தேவனுக்கும், மனுஷனுக்கும் முன்பு குற்றமற்ற மனச்சாட்சி, தர்மம், மனிதன் நம்பகத் தன்மை உடையவனாக இருக்க வேண்டும் என்று இத்துணை செய்திகளையும் பேலிக்ஸ் முன்பு நிறுத்துகிறார் பவுல்.

பேலிக்ஸ் தன்னை அந்த வசனமாகிய கண்ணாடியிலே பார்கிறார். தன்னைத் தான் காண்கிறார். ஆனால் 22ம் வசனத்தை வாசிக்கையில், "இந்த மார்க்கத்தின் விஷயங்களை விவரமாய் அறிந்திருந்த பேலிக்ஸ் இவைகளைக் கேட்டபொழுது : சேனாபதியாகிய லீசியா வரும்போது உங்கள் காரியங்களைத் திட்டமாய் விசாரிப்பேன் என்று சொல்லி" என்றிருக்கிறது. அதாவது விவரமாய் விஷயங்களை அறிந்த

பேதமையற்ற பேலிக்ஸ், அறிவு தீபத்தை கால தாமதம் என்னும் மரக்காலின் கீழ் வைத்து மூடிவிடுகிறான். மற்றொரு சமயம், இதே பேலிக்ஸ் யூத ஸ்திரீயாகிய தம் மனைவியை அழைத்துக் கொண்டு, பவுலை கேட்கும்படி வந்தான். அப்பொழுதும், தேவ வசனமாகிய கண்ணாடி தன்னை கண்ட பேலிக்ஸ் சமயத் திருத்தம் செய்வான் என நினைத்த வசதியான சமயத்தை அல்லவா தேடுகிறான் (அப்.24:25) எனக்கன்பானவர்களே, நாம் இப்படி இராமல், தேவ வசனம் கிடைத்த உடன் அதை உட்கொண்ட எரேமியாவைப் போல் இருப்போம். (எரே.15 : 16)


## நம்முடைய திருப்திக்காக ஏதோ செய்கிறோம்

நமது ஆண்டவர், இப்புவியல் சஞ்சரிக்கையில், பல உவமைகளைக் கூறி, அதன் மூலம் ஞான அர்த்தங்களை வெளிப்படுத்தினார். அதிலே ஒரு முத்தான உவமையை, மத்தேயு ஆசிரியர் தனது 21ம் அதிகாரத்தில் வடித்திருக்கிறார். அதிலே தந்தை, தனையனைப் பார்த்து வயலுக்கு போ என்றான், உடனே இரண்டாம் மகன் **போகிறேன் ஐயா!** என மரியாதையுடன், பவ்வியமாக வாய் நிறையச் சொல்கிறான், ஆனாலும் அவன் போகவில்லை, எனக்கன்பானவர்களே, நாமும் திருவசனமாகிய கண்ணாடியிலே நம்மைக் காணும் போது, தேவ வசனம் நம்மை நாடி வரும் போது, ஓசியா, எப்ராயீமைக் குறித்தும், யூதாவைக் குறித்தும் புலம்புவது போல், ".... உன் பக்தி காலையில் காணும் மேகத்தைப் போலவும், விடியற்காலையில் தோன்றும் பனியைப் போலவும் ஒழிந்து போகிறது" (ஓசி.6:4) என்று தேவன் நம்மையும் பார்த்து புலம்பாதபடி நாம் வசனத்தின்படி நடக்க முற்பட வேண்டும.

அதே உவமையில், முதலாம் மகன், போகமாட்டேன் என்று சொன்னாலும், பின்பு மனஸ்தாபப்பட்டுப் போனான், தன் தகப்பனின் சித்தம் செய்தான் என அறிகிறோம் (மத்.21 : 28-32) நாமும் கூட கடந்த ஆண்டுகளில், வசனமாகிய கண்ணாடியின் மூலமாக நமது குறைகளை கண்டும் அதை சரி செய்யாமலிருந்தாலும், தேவன் நமக்கு கூட்டிக் கொடுத்த இந்த புதிய ஆண்டில், வசனமாகிய கண்ணாடியில் பார்த்த உடன், நமது குறைகளை, உலகம் என்ன நினைக்கும், உற்றார் என்ன எண்ணுவார்கள், என்றெல்லாம் கவலைப்படாமல், அவைகளை நீக்கி பரமனின் சித்தம் செய்வோம். பூரண பிரமாணமாகிய, புதிய பிரமாணத்தை உற்றுப் பார்த்து சிறு குறைகள் இருந்தாலும் அதை நீங்குவோம். **இதுவே மூன்றாவது வகை.** அப்படிச் செய்யும் போது பரலோகத்தின் தேவன் நம்மை பாக்கியவான் என்றுரைப்பார் என்பதுறுதி. தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக ஆமென்.

**ஜே. பிக்கின்ஸ்.**

# இயேசு எப்பொழுது பிறந்தார்?



எனக்குப் பிரியமான என் அன்பு சிறார்களே! உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். புதிதாகத் தொடங்கியிருக்கும் இப்புதிய வருடத்தில், அநேக ஆசீர்வாதங்களையும், நன்மைகளையும் தேவன் உங்களுக்குத் தந்தருளுவாராக. இந்த மாதம் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய ஒரு காரியத்தைக் குறித்து நாம் பார்க்கப் போகிறோம். அது என்னவாக இருக்குமென எண்ணுகிறீர்கள்? அதைத் தெரிந்து கொள்ள என்னோடு சேர்ந்து வாருங்கள்.

சரி! உங்கள் நண்பர்கள் பலர் கடந்த மாதத்தில் உங்களுக்கு "கிறிஸ்துமஸ்", வாழ்த்துக்கள் சொல்லியிருப்பார்கள். ஆனால், நீங்களோ அந்த நாளைக் கொண்டாடியிருக்க மாட்டீர்கள் என நான் நம்புகிறேன். ஏன் நாம் இதைக் கொண்டாடுவதில்லை என்று நீங்கள் சிந்தித்து இருப்பீர்கள். அப்படித் தானே? சரி, கவலைப்படாதீர்கள். நான் அதற்கான சில காரணங்களை இங்கே தருகிறேன்.

இயேசு எப்பொழுது பிறந்தார் என்று திட்டமாய் யாருக்கும் தெரியாது. நமக்கு அந்த குறிப்பிட்ட மாதமோ, தேதியோ, வருடமோ தெரியாது. **வேதாகமம் அப்படி குறிப்பிட்டு ஒன்றும் சொல்லவில்லை.** ஆதி கிறிஸ்தவர்களும் அதையொரு பெரிய காரியமாக எடுத்துக் கொள்ளவில்லை. அந்த காலங்களில் வாழ்ந்த கிறிஸ்தவ எழுத்தாளர்களும், சிந்தனையாளர்களும், இயேசுவின் பிறப்பு எந்த ஒரு குறிப்பான தேதியில் நடந்தது என்பதையும் குறிப்பிடவில்லை.

இன்னும், கி.பி. 354-ல், ரோம நாட்டில் இருந்த சமயத் தலைவர்கள் "டிசம்பர் 25" என்ற

தேதியைத் தேர்வு செய்தனர். ஏன் இந்த தேதியைத் தேர்வு செய்தனர் என்ற கேள்வியை எழுப்புவோமானால் அதற்கும் பதில் திட்டமாகத் தெரியவில்லை. ஆனால், ஒரு சிறந்த யூகம் என்னவென்றால், ரோம் நகரில் வாழ்ந்த கிறிஸ்தவரல்லாதவர்கள் சூரியக் கடவுளான "சால்"-ன் பிறந்த நாளைக் கொண்டாடி னார்கள். அந்த நாள் 'ஜெயங் கொள்ளப்படாதவனின் பிறந்த நாள் என்றும் அழைக்கப்பட்டது'. அந்த நாளைத்தான் ரோமாபுரியிலுள்ள சமயத் தலைவர்கள் தெரிந்து எடுந்திருப்பார்கள் போலிருக்கிறது. அப்பொழுது இருந்தே கிறிஸ்துமஸ் என்பது புறமத பழக்கங்களோடு இரண்டறக் கலந்து விட்டது.

சரி, இயேசு எந்த வருடத்தில் பிறந்தார்? என்பதைப் பற்றி சிந்திப்போம். இது ஒரு முக்கியமான விஷயம். ஏனென்றால் சிலர் லூக்கா கூறின குடிமதிப்பைக் குறித்து சந்தேகப் படுகின்றனர் (லூக்கா 2 : 12). குடிமதிப்பு எழுதப்படுவதின் நோக்கம், ரோம ஆளுகையில் கீழ் ஜனத்தொகையை கணக்கிட்டு, அவர்கள் மூலமாக வரி வசூலிப்பதற்கு ஏதுவாக அமையும். வேதாகமத்தைக் குறை கூறுகிறவர்கள் கிபி. 6 வரை குடி மதிப்பு எழுதப்படவில்லை என்று கூறுகின்றனர். ஆனால் இப்பொழுது கி.மு. 8-ல் குடி மதிப்பு எழுதப்பட்டது என்பதற்கு ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

இன்னொன்று ஏரோது இராஜாவின் காரியம். அவன் பெத்லகேமிலும், அதைச் சுற்றிலும் உள்ள ஊர்களிலும் இருக்கிற 2 வயதிற்குட்பட்ட ஆண் பிள்ளைகளைக் கொலை செய்யக் கட்டளையிட்டான் (மத்.2 :10) சில காலம் கழித்து மார்ச் 11, 4-ல் ஏரோது இறந்து போனான். எனவே இயேசுவின் பிறப்பிற்கு சாதகமான வருடம் குடிமதிப்பு எழுதப்பட்ட வருடத்திலிருந்து ஏரோது இறந்த வருடத்திற்குள்ளாகத்தான் இருக்க வேண்டும்.

இன்று "கிறிஸ்துமஸ்" ஒரு ப ண் டி கை ய ா க க் கொண்டாடப்பட்டு வருகிறது. இயேசு பிறக்காதிருந்தால் நாம் விடுமுறை நாளைப் பெற்றிருக்க முடியாது. ஆனால், நாம் வேதத்தில் காணும் சபைகள் இந்த நாளை ஒரு பொருட்டாக எண்ணவில்லை என அறியலாம். ஆதி கிறிஸ்தவர்கள் இயேசுவின் பிறப்பு வாழ்க்கை மரணம், உ யி ர் த் தெ ழு த ல் ஆகியவற்றைதான் நினைவு கூறினார்கள். நாமும் அதைக் கடைபிடிப்பதே (or) நினைவு கூருவதே சிறந்ததாகவும், தேவனுக்குப் பிரியமானதாகவும் இருக்கும்.

**R. Abel Rodger Nayagam**

## தீத்து ஒரு கண்ணோட்டம்

ஆசிரியர் : அப்போஸ்தலனாகிய பவுல்

காலம் : கி.பி. 66 - 67

## தீத்து மற்றும் இந்நூல் பற்றி

1. அப்போஸ்தலர் புத்தகத்தில், இவருடைய பெயர் இடம் பெறவில்லை, ஆனால் கலாத்தியர் நிருபத்தில் நாம் வாசிக்கையில், பவுலோடும், பர்னபாவோடும், விருத்தசேதனத்தைப் பற்றி விவாதிக்க எருசலேமுக்குப் போனான் எனக் காண்கிறோம். (கலா. 2 : 1, அப். 15)
2. இவன் ஒரு கிரேக்கன், "பொதுவான விசுவாசத்தின்படி உத்தமகுமாரன்" என்று வாசிக்கையில், இவனை பவுல் மனமாற்றமடையச் செய்தாரெனத் தெரிகிறது.
3. ஒரு பிராந்திய சபையின் ஆளுகை அமைப்பு, கிரியை, ஆராதனை எப்படி இருக்க வேண்டுமென இந்நூல் வலியுறுத்துகிறது.
4. பிரசங்கியார்களுக்கு ஊக்கத்தையும், புத்திமதிகளையும் இந்நூல் தருகிறது.
   a) ஆரோக்கியமான உபதேசத்துக்கேற்றவைகளைப் பேசு (2 : 1)
   b) . . . நீ அவர்களை கண்டிப்பாய் கடிந்துகொள் (1 : 14)
   c) . . . ஒருவனும் உன்னை அசட்டைபண்ண இடங்கொடாதிருப்பாயாக (2 : 15)
   d) . . . வாக்குவாதங்களை விட்டு விலகு (3 : 9)
5. வரப்போகிற வழிவிலகளையும், கள்ளப் போதகர்களையும் பற்றிய எச்சரிப்பை இந்நூல் தருகிறது.
6. கிரேத்தா தீவில் உள்ள கிறிஸ்தவர்கள், நம்பத்தகாதவர்களாகவும், நிலையற்றவர்களாகவும் இருந்து, அங்குள்ள சபைக்கு பிரச்சனை தந்திருக்கிறார்கள். (1 : 12)

## இந்நூலின் செய்தி

1. தகுதியுள்ள மூப்பர்களால் சபை வழி நடத்தப்பட வேண்டுமென்பது தேவனுடைய சித்தமாக இருக்கிறது. (1 : 5 - 9)
2. மூப்பர்கள், கள்ள போதகர்களின் கேள்விக்கு பதில் தரக்கூடியவர்களாக இருக்க வேண்டும் ( 1 : 9 -11)
3. முதிர்வயதுள்ளவர்கள், தங்கள் வாழ்க்கையில் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். (2 1 : 5)
4. கள்ளப் போதர்களுக்கு புத்தி சொல்ல வேண்டும், மனந்திரும்பாத பட்சத்தில் அவர்களை விட்டு விலக வேண்டும். ( 3 : 10, 11)

# தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள் (எபே 4:30)

கெட்ட வார்த்தைகள் நமது வாயிலிருந்து புறப்பட்டு வரும்படி நாம் நடந்து கொண்டால் அதன் மூலம் நானும், நீங்களும் தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்துகிறோம் என்று கடந்த இதழில் பார்த்தோம். அதற்கு மாறாக, பக்தி விருத்திக்கேதுவான நல்ல வார்த்தைகளைப் பேசும்போது, தேவனைப் பிரியப்படுத்துகிறோம். நாம் பேசுவதன் மூலம் மற்றவர்களைப் பெலப்படுத்தி கட்டுவிக்கிற வேலையைச் செய்ய முயற்சிக்க வேண்டும்.

தேவன் இன்னுமொரு காரியத்தையும் தெளிவுபடுத்தியிருக்கிறார். கசப்பு, கோபம், மூர்க்கம், கூக்குரல், தூஷணம் மற்றும் துர்க்குணம் போன்றவைகளில் குற்றமுடையவர்களாயிருந்தால், நாம் அவரை துக்கப்படுத்துகிறோம் என்று. மேற்கண்ட அனைத்து காரியங்களும் தேவனைத் துக்கப்படுத்தும் குணங்களாக அல்லது செயல்களாக இருக்கிறபடியால், அவைகளைத் தவிர்ப்பதற்கு, நானும் நீங்களும் முழுபலத்தோடு பிரயாசை எடுக்க வேண்டும். அதைச் செய்வதற்கான ஒரே வழி எபே 4:32-ல் தேவன் சொல்லியதற்குக் கீழ்ப்படிவாகும்.

இந்த வசனத்தில் தேவன் பல முக்கியமான காரியங்களைக் கட்டளையிடுகிறார். முதலாவது, நானும், நீங்களும் ஒருவருக்கொருவர் தயவாய் இருக்கும்போது, தேவனைப் பிரியப்படுத்துகிறோம்! தயவாயிருப்பதன் பொருள், மற்றவர்களிடம் நன்மையாயும், இனிமையாயும் இருப்பது, இன்னும் கிருபையாயிருப்பது. தயையுள்ள மனிதன் உதவுகிறவனும், நற்பழக்கமுடையவனாகவும் இருப்பான். தயை என்பது மற்றவர்களுக்கு சேவை செய்யும் விருப்பத்தையும் உள்ளடக்கியது. இதன்பொருள் இனிமையான, தாராள செயல்பாடுடையதே ஒழிய கசப்பானதல்ல.

ரோம 12:10-ல், நானும் நீங்களும் சகோதர சிநேகத்தோடே ஒருவர் மேலொருவர் பட்சமாயிருக்க வேண்டுமென தேவன் சொல்லுகிறார். இது நம்மைக்காட்டிலும், மற்றவர்கள் கனத்தைப் பெற்றுக்கொள்ளட்டும் என்ற விருப்பத்தையும் உள்ளடக்கியது. தயை என்பது, உண்மையான அன்பின் அடையாளமாயிருக்கிறது (கொரி 13:4)

இரண்டாவது நானும், நீங்களும் இளகிய மனதுடையவர்களாயிருக்கும்போது அதில் தேவன் பிரியப்படுகிறார். இளகிய மனதுடனிருப்பதென்பது, மற்றவர்களிடத்தில் இரக்கமாய் உருக்கமாயிருப்பது. மற்றவர்கள் ஒரு காரியத்தைக் குறித்து எப்படி எண்ணுவார்களோ அதுபோல நாமும் எண்ணுகிறவர்களாக இருப்பது அவசியம். இளகிய மனதுடன் இருப்பதன் பொருள், மற்றவர்களின் பிரச்சினையையும், பாடுகளையும் தெரிந்து கொள்வதையும் உள்ளடக்கியதாகும். ஆனால், இதற்கு இன்னும் மேலான பொருள் உண்டு. அது மற்றவர்களின் பிரச்சினைகளை அறிந்து கொள்வதோடு, அவர்களுடைய தேவையில் அவர்களுக்கு உதவி செய்ய முயற்சிப்பதுமாகும்!

நாம் சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்படவும், அழுகிறவர்களுடனே அழவும் வேண்டும் (ரோம 12:15). கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரத்தில் ஒவ்வொரு கிறிஸ்தவனும் அங்கமாக இருக்கிறான் (I கொரி 12:27). ஆகவே, ஒரு அவயவம் பாடனுபவிக்கும்போது, மற்றவர்களும் அவர்களோடு சேர்ந்து பாடனுபவிக்கிறார்கள். ஒரு அவயவம் மகிமைப்பட்டால், எல்லா அவயவங்களும் கூடச் சந்தோஷப்படும் (I கொரி 12:26)

மூன்றாவது நானும், நீங்களும் ஒருவரையொருவர் மன்னிக்கும்போது, தேவன் அதில் பிரியப்படுகிறார். இங்கே, முக்கியமான ஒன்றை கவனியுங்கள். தேவன் நம்மை மன்னித்தது போல, ஒருவரையொருவர் மன்னிக்க வேண்டும். அதாவது, நாம் மனக்குறையோடும், வேண்டாவெறுப்போடும் செய்யாமல், தேவன் மன்னித்தது போல மன்னிக்க வேண்டம்.

லூக் 17:34-ல் உன் சகோதரன் உனக்கு விரோதமாய்க் குற்றம் செய்தால் அவனைக் கடிந்துகொள் என்று கர்த்தர் கட்டளையிட்டிருக்கிறார். ஆனால், அவன் மனந்திரும்பினால், நாம் அவனுக்கு மன்னிக்க வேண்டுமென தேவன் எதிர்பார்க்கிறார். அவன் ஒரு நாளைக்கு நமக்கு விரோதமாக ஏழு தரம் குற்றம் செய்து, ஏழு தரமும் நான் மனந்திரும்புகிறேனென்று சொன்னால், அந்த ஏழு தரமும் நாம் அவனுக்கு மன்னிக்க வேண்டுமென்று விரும்புகிறார்!

தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஒவ்வொரு கிறிஸ்தவனும், கிறிஸ்து நமக்கு மன்னித்தது போல, உருக்கமான இரக்கமும், தயவும், மன்னிக்கும் குணமும் உடையவர்களாயிருக்க வேண்டும் (கொலோ 3:12,13)

இன்னும், எபே 4:32-ன் படி, மன்னிப்பு எங்கே இடம் பெற்றிருக்கிறதென்று கவனியுங்கள். " கிறிஸ்துவுக்குள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த கிறிஸ்துவுக்குள் வருவதற்கு ஒரே ஒரு வழி தான் இருக்கிறது.

ரோம 6:3,4-ல் சிறிஸ்துவுக்குள்ளாக்கும் ஞானஸ்நானம்தான், ஒருவன் இயேசுவுக்குள்ளாகும் வழி என்று தேவன் சொல்லுகிறார்! அதையே தான் கலா 3:26,27-ல் எனக்கும், உனக்கும் தேவன் சொல்லுகிறார். இன்னும் ரோம 6:3-ல் நாம் இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெறும்பொழுது, அவருடைய மரணத்துக்குள்ளாகவும் ஞானஸ்நானம் பெறுகிறோம் என்று கற்றுக் கொள்கிறோம். ஆத்துமாக்களை இரட்சிக்கும் வல்லமை கொண்ட அவருடைய இரத்தம், அவருடைய மரணத்தில் சிந்தப்பட்டது. ஆகவே இரத்தத்தினால் கிடைக்கும் நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரே வழி இயேசு கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் அடைவது தான்!

இன்னும் ரோம 6:4-ன் படி வேதாகம ஞானஸ்நானம் என்பது, தண்ணீருக்குள்ளாக அடக்கம் பண்ணப்படுதல் என்பதைத் தயவாய் கவனியுங்கள். ஆகவே, ஞானஸ்நானம் என்பது, முழுகுதலேயொழிய, ஊற்றுதலோ, தெளித்தலோ அல்ல!

இயேசு கிறிஸ்துவின் வல்லமையுள்ள இரத்தத்தின் மூலம், நம்முடைய கடந்த காலப் பாவங்களெல்லாம் தண்ணீர் ஞானஸ்நானத்தினாலே கழுவப்பட்டது.(அப்22:16). அது, நாம் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படி, தண்ணீரிலிருந்து எழும்படிசெய்கிறது.

ஆகவே, உங்களுடைய பழைய பாவங்கள் மன்னிக்கப்படும்படியாய் நீங்கள் தண்ணீருக்குள் அடக்கம் பண்ணப்படாதவர்களாயிருந்தால், நீங்கள் கிறிஸ்துவுக்குள்ளாக இல்லை. பாவமன்னிப்புக்காக தண்ணீரில் மூழ்கும்படியான தேவகட்டளையை நீங்கள் தொடர்ந்து புறக்கணிக்கிறவர்களாக இருந்தால், நீங்கள் தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்துகிறவர்களாயிருப்பீர்கள். நீங்கள் தேவனுக்குக் கீழ்ப்படும்படியாய் உங்களுக்காக உதவ, நாங்கள் விரும்புகிறோம். அப்படி உங்களக்கு உதவ, எங்களால் முடியுமென்று நீங்கள் எண்ணினால், அதை எங்களுக்குத் தெரிவிக்கத் தயங்காதீர்கள்.

இந்தத் தலைப்பு சம்பந்தமாக இதுவரை என்ன கற்றுக்கொண்டோம் என்பதை இப்பொழுது தொகுத்துப்பார்ப்போம்.

பரிசுத்த ஆவியைத் துக்கப் படுத்தாதீர்கள் என்று சொல்லும்போது, தேவன் நாம் பாவ வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கக்கூடாது என்று பொருள் கொடுக்கிறார். தேவனுக்குக் கீழ்ப்படியாத ஒரு வாழ்க்கை கூடாது.

நாம் பாவத்திலே வாழ்ந்து அவருக்கு எதிராகக் கலகம் செய்து, பாவ வாழ்க்கை வாழும் போது, அது தேவனைத் துக்கப்படுத்துகிறது. பாவ வாழ்க்கையிலிருந்து நாம் மனந்திரும்பாத பட்சத்தில், தேவன் நம்மைக் கடுமையாகத் தண்டிப்பார். நமக்கு விரோதமாக யுத்தம் செய்வார். நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுப்போம். பரலோகத்தில் நித்திய இளைப்பாறுதலுக்குள் நாம் பிரவேசிக்க முடியாது.

நாம் ஒவ்வொருவரும், ஒவ்வொரு நாளிலும் வளர்ந்து, மேலோங்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவைப் போலாக வேண்டுமென்று விரும்புகிறார். நாம் அவருக்கு செவிகொடுக்க வேண்டும்.புதிய ஏற்பாட்டு வசனங்களைக் கொண்டு நம்மிடத்திலே பேசுகிறார்.

நாம் ஒவ்வொருவரும் அவராலே போதிக்கப்பட நம்மை அனுமதிக்க வேண்டும். அதை நாம் அவருடைய வசனங்களைத் தியானிப்பதன் மூலம் செய்யலாம். இன்னும், அவருடைய வார்த்தைகளை நம்முடைய அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்துவதன் மூலமும் அப்படிச்செய்யலாம்.

நாம் அவருக்குள் இவ்விதமாக வளர்ந்து, ஒவ்வொரு நாளிலும் கிறிஸ்துவைப்போலிருக்க முயற்சித்தால், தேவன் நம்மில் பிரியப்படுவார். நாம் ஆவியில் வளர்ந்து கிறிஸ்துவைப் போல மாற மறுப்போமானால், நாம் தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்துகிறவர்களாயிருப்போம்.

நானும், நீங்களும், பொய்யையல்ல, உண்மையைப் பேச வேண்டுமென்றே தேவன் விரும்புகிறார். பாவமில்லாத கோபமடையவே அவர் அனுமதித்துள்ளார். கோபம் நம்முடைய மனதில் தங்கியிருப்பதைத் தவிர்க்க வேண்டுமென்றே அவர் கேட்கிறார். பிசாசானவனை எதிர்த்து நிற்கும்படியே கட்டளை கொடுத்திருக்கிறார்.

நாம் யாரும் திருடாமலிருந்து, நம்முடைய கரங்களினால் வேலை செய்ய வேண்டுமென்றே விரும்புகிறார். ஜனங்களைக் கட்டும்படியான நல்ல வார்த்தைகளைப் பேசும்படியே அவர் விரும்புகிறார். மற்றபடி சகலவிதமான கசப்பு, கோபம், மூர்க்கம், கூக்குரல், தூஷணம் போன்றவை நம்மை விட்டு நீங்க வேண்டும். இத்தோடு கூட, நாம் ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயுமிருந்து, மன்னிக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்.

இவைகளின்படி செய்ய நாம் மறுப்போமானால், நாம் தேவனைத் துக்கப்படுத்துகிறவர்களாயிருப்போம். அது தேவ கோபாக்கினையை நம்மேல் கொண்டு வரும். அப்பொழுது, அவரால் கிடைக்கும் இளைப்பாறுதல் நமக்குக் கிடைக்காது. தயவு செய்து, தேவனுடைய பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தாதீர்கள்.

கர்த்தருக்குச் சித்தமானால், “கிறிஸ்தவ விசுவாசத்தின் - அடிப்படைகள்” என்ற தலைப்பின் கீழாக, புதிய பாடத் தொடரை ஆரம்பிக்க உள்ளோம். இந்தப் பாடமானது, கீழ்க்கண்ட காரியங்களை நாம் ஒவ்வொருவரும் செய்ய நமக்கு உதவி செய்யும் என்று நம்பலாம்.

1. தேவன் மீதும், வேதாகமம் அவருடைய வார்த்தை என்பதின் மீதும் நமது விசுவாசம் பெருகும்.
2. தேவனுடைய வார்த்தைகளை நம்முடைய அடிப்படை வாழ்க்கையோடு பொருத்திப் பார்க்கும் நமது திராணி அதிகரிக்கும்.
3. பாவத்தைப் பற்றிய சில காரியங்களைத் தெரிந்து கொள்ளலாம்.
   a) எவ்வளவு கொடூரமானது
   b) பாவத்திற்கான தேவ தீர்வு
   c) பாவத்திலிருந்து நம்மை விலக்கிக் கொள்ளும் திராணியை வளர்த்துக் கொள்வதற்கான நடைமுறை வழிகள்.
4. கிறிஸ்துவுக்கும், கிறிஸ்தவனுக்கும், நமக்கும், அவருக்கும் உள்ள உறவைப் பற்றித் தெரிந்து வளருவதற்கு அவர் நம்முடைய சிறந்த சிநேகிதராயிருக்கிறார் (யோவா 15 : 13)!
5. இயேசுவானவர் கட்டின ஒன்றான மெய்ச் சபையின் முக்கியத்துவம் மற்றும் அதன் சிறப்புத் தன்மை பற்றிய நம்முடைய எண்ணத்தை மேலும் வலுப்படுத்துவதற்கு.
6. கிறிஸ்தவனாயிருப்பதன் மூலம் கிடைக்கும் அருமையான ஆசீர்வாதங்கள், சிலாக்கியங்கள் மற்றும் பொறுப்புகளைப் பற்றி மேலும் அறிந்து கொள்வதற்கு (எபே 1 : 3, I யோவா 3 : 1; I பேது 3 : 15)
7. ஒருவன் கிறிஸ்தவனாயிருந்து வளர வேண்டுமென்ற தேவ கட்டளையை வலியுறுத்தி, ஆவிக்குரிய வளர்ச்சியை எட்டுவதற்கான நடைமுறை வழிகளைக் கற்றுக் கொள்வதற்கு (IIபேது3:18)

EZSR

Charlie Di Palma

# வற்றாத நீரூற்று

ஒரு பிரபலமான ஞானி தன்னுடைய நண்பர்களை குறித்து இவ்வாறு கூறுகிறார். அவர்களுடைய வாழ்க்கை ஒரு தரிசு நிலத்தைப் போன்றது. அவர்கள் குழப்பமடைந்திருக்கிறார்கள். பசுமைக்கு அவசியமான தண்ணீரை அவர்கள் தரிசு நிலத்தில் தேடி அலைகிறார்கள். இன்றைக்கு கணக்கற்ற மக்கள் இப்படிப்பட்ட நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்ற ஒரு உண்மையை பார்க்கும் பொழுது அப்பேர்ப்பட்ட மக்கள் தங்களுடைய ஆத்தும தாகத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக தரிசு நிலத்தைப் போன்ற அநேக ஜீவனில்லாத உபதேசங்களை கேட்பதற்கு அலைந்து கொண்டிருப்பதைப் பார்க்க முடிகிறது.

இந்நிலை கொண்ட மக்களைப் பற்றி எரேமியா தீர்க்கதரிசி சொல்லுகிறார். (எரே. 2 : 13) என் ஜனங்கள் இரண்டு தீமைகளைச் செய்தார்கள். ஜீவத் தண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டுவிட்டார்கள். தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ள தொட்டிகளைத் தங்களுக்கு வெட்டிக்கொண்டார்கள் என்று கூறுகிறார். எகிப்தில் அடிமைகளாயிருந்த இ ரவேல் ஜனங்களை விடுதலையாக்கி கொண்டு வந்து சீனாய் சிகரத்திற்கு கொண்டு வந்து நாற்பது ஆண்டுகள் வனாந்திரத்தில் அவர்கள் எந்த வேலையும் செய்யாதிருக்க, மன்னாவையும் இறைச்சியையும் கன்மலையிலிருந்து தண்ணீரையும் கொடுத்து அவர்களை அற்புதமாக போஷித்து வந்த ஜீவனுள்ள தேவனை அவர்கள் உடனே மறந்துவிட்டார்கள்.

ஆனால் அவர்கள் ஜீவனுள்ள தேவன் படைத்த கல், மரம் இவைகளினால் உருவாக்கிய சிலைகளை வணங்கி இவர்களின் தேவைகளை ஒரேயிடத்தில் வைக்கப்பட்டு ஒன்றுமே செய்ய முடியாத உயிரில்லாத அழிந்து போகக்கூடிய சிலைகளிடத்தே தேடி ஓடினார்கள். தேடி ஓடின இவர்களுக்கு ஒன்றுமே கிடைக்கவில்லை. இவர்கள் பிரச்சனையும் தீரவில்லை. இந்த இஸ்ரவேல் மக்களைப் போல இந்த யுகத்தில் அநேக மக்கள் இப்படித்தான் இருந்துக் கொண்டு அலைந்துக் கொண்டிருக்கிறார்கள். ஜீவதண்ணீரைக் கொடுக்கக்கூடிய இயேசு என்னும் ஜீவநதியை விட்டுவிட்டு தண்ணீரைப் போல தோற்றம் அளிக்கும் வறண்டு போயிருக்கிற நதிகளை நோக்கி ஓடி அலைந்து தண்ணீர் கிடைக்காமல் தண்ணீர் கிடைத்தும் குடிக்க முடியாமல் தாகத்தால் தவித்துக் கொண்டு இருக்கிறார்கள். அன்று வனாந்திரத்தில் மாராவின் கசப்பான தண்ணீரைக் குடிக்க முடியாமல் போன இஸ்ரவேல் மக்களைப் போல இருக்கிறார்கள். அன்று மோசே இஸ்ரவேல் மக்களுக்காக ஜீவனுள்ள தேவனை நோக்கி வேண்டுதல் செய்தபோது மோசேயின் வேண்டுதலை கேட்டு தேவன் மோசேயை ஒரு மரத்தின் கிளையை வெட்டி தண்ணீரில்

போடச் சொல்லி அந்தக் கசப்பான மாராவின் தண்ணீரை மதுரமாக மாற்றிய தேவன். (யாத் 15 : 22 - 25)

இன்று அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக வற்றாத ஜீவத்தண்ணீரை உலகத்திலுள்ள அனைத்து மக்களுக்கும் கொடுக்கும்படியாக இயேசு கிறிஸ்துவை இந்த மானிட உலகத்திற்கு அனுப்பினார். இயேசு கிறிஸ்து சமாரியா நாட்டின் வழியாக சென்ற போது அவர் களைப்படைந்தவராய் யாக்கோபுடைய கிணற்றண்டை உட்கார்ந்த பொழுது சமாரிய ஸ்திரீ ஒருத்தி தண்ணீர் மொள்ள வந்தாள். இயேசு அவளிடத்தில் தாகத்துக்கு தண்ணீர் கேட்ட போது நீர் யூதராயிருக்க சமாரியா ஸ்திரீயாகிய என்னிடத்தில் எப்படி தண்ணீர் கேட்கலாம் என்றாள். இயேசு அவளை நோக்கி உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதை அறிந்தாயானால் நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய். அவர் உனக்கு ஜீவதண்ணீரைக் கொடுத்திருப்பார். நீ கொடுக்கும் தண்ணீரைக் குடித்தால் மீண்டும் தாகம் உண்டாகும். நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது. நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாய் இருக்கும் என்றார். (யோ. 4 : 6 : 10) நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால் அவன் இரட்சிக்கப்படுவான். அவன் உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைவான் (யோ.10 : 9) கிறிஸ்துவுக்குள் நாம் இருக்கும் போது அவர் நம்மை வற்றாத நீரூற்றாய் நம்மை மாற்ற வல்லவராயிருக்கிறார். நீங்கள் வற்றாத நீருற்றாய் ஜீவநதியாய் இருக்க வேண்டுமானால் இயேசு கிறிஸ்து சொன்ன வாசல் வழியாய் உட்பிரவேசிக்க வேண்டும். (கிறிஸ்துவின் சபைக்குள்) தேவனுடைய வசனமே விசுவாசத்தின் மூலப் பிறப்பிடமாய் இருக்கின்றது. (ரோம 10:17) நீங்கள் தேவனை நம்புகிறீர்களா? அவருடைய குமாரனாகிய கிறிஸ் துவே மனுகுலத்தின் இரட்சகர் என்பதை நம்புகின்றீர்களா? உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி இருக்கிறீர்களா? (அப். 17 : 30, 31) பாவத்திலிருந்து நீங்கள் ஜீவனுள்ள தேவனிடத்தில் திரும்பியிருக்கின்றீர்களா? இயேசுவை தேவனுடைய குமாரனென்றும் கர்த்தரென்றும் வெளியரங்கமாய் அறிக்கையிட்டு இருக்கிறீர்களா? (ரோம.10:10) நீங்கள் பாவமன்னிப்புக்கென்று இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறீர்களா? (தண்ணீரில் முழுகுதல்) (ரோம. 6 : 4) (அப். 2 : 38) இப்படி செய்பவர்களை கர்த்தர் சபையிலே சேர்த்துக் கொள்ளுகிறார் (அப். 2 : 47) இப்படிப்பட்ட மக்களுக்கு அவர் வற்றாத நீரூற்றாய் இருக்கிறார். அந்த வற்றாத நீரூற்றண்டையில் (கிறிஸ்துவண்டையில்) இன்றே உங்களை அழைக்கிறார். ஏனென்றால் நம்முடைய இரட்சகரான இயேசுவின் வழிமட்டுமே பசுமையின் மூலாதாரம் (வற்றாத நீரூற்று) என்பது உண்மையாகும்.

**யோசுவா செல்வம்**
அரக்கோணம்.

# பொறாமை

அன்பு வாசகர் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தில் நல் வாழ்த்துக்கள். இம்மாதம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. சத்தியத்தை அறிந்த உங்களோடே சாந்தமாய் பேச தேவன் கிருபை செய்ததற்காக தேவனுக்கு தோத்திரம். "பொறாமை" என்கிற வார்த்தையைக் கேட்கும் போது மிகவும் வருத்தமாய் இருக்கிறது. ஏனென்றால், இது ஒரு மனிதனை சிறுக சிறுக தேவனிடத்தில் இருந்து தூரமாக்கும் ஒரு கொடிய வியாதியாய் இருக்கிறது. தாவீதின் குமாரன் சாலொமோன்ஞானி இதை பொறாமையோ எலும்புருக்கி நீதி 14 : 30 என்று கூறுகின்றார். பொறாமை என்பது மனிதனின் எலும்பையும் உருக்கும் அளவிற்கு வல்லமை உள்ளது என்றால் கிறிஸ்தவர்களாகிய நமக்கு இப்படிப்பட்டவை தேவையா என்று சிந்திக்கும் போது அப்போஸ்தலனாகிய பேதுருவின் வார்த்தைகளை நினைவுக்கு வருகிறது. "இப்படியிருக்க கர்த்தர் தயையுள்ளவரென்பதை நீங்கள் ருசிபார்த்தது உண்டானால் சகல துர்க்குணத்தையும் சலகவித கபடத்தையும் வஞ்சகங்களையும் பொறாமைகளையும் சகலவித புறங்கூறுதலையும் ஒழித்து விட்டு, நீங்கள் வளரும்படி புதிதாய்ப் பிறந்த குழந்தையைப் போல திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப் பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள் ( I பேதுரு 2:1-3)

வியாதிக்கு ஒப்பாயிருக்கும் பொறாமையை நாம் ஒழித்து விட்டு, ஆவிக்குரிய வளர்ச்சியில் வளர வேண்டும். பொறாமையை ஆமை போல இருதயத்தின் ஒரு பகுதியில் மறைத்து வைத்துக் கொண்டு வாழ்ந்தால் நாம் ஆவிக்குரிய வளர்ச்சியில் சரியானபடி வளர முடியாது. எனவே ஞானி மீண்டும் கூறுகிறார். உன் மனதை பாவிகள் மேல் பொறாமை கொள்ள விடாதே நீ நாடோறும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடிரு (நீதி 23 : 17). பொறாமை என்கிற வியாதியை நம் இருதயத்தில் இருந்து நீக்கிப் போட்டு கர்த்தரைப் பற்றிக் கொண்டிருப்போமாக.

**பொறாமையினால் நமக்கு என்ன கிடைக்கும் :**

கோபம் நிர்மூடனைக் கொல்லும் : பொறாமை புத்தியில்லாதவனை அதம் பண்ணும் (யோபு 5 : 2).

என் அருமை சகோதரனே, சகோதரியே, பொறாமையுடன் வாழ்ந்தால் அந்த பொறாமை நம்மை புத்தியில்லாதவனாக மாற்றி, நம்மை அதம் பண்ணி நம் விசுவாசத்தையே சேதப்படுத்திவிடும் என்பது உண்மை.

"மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன. அவையாவன விபச்சாரம் . . . பொறாமை . . . (கலா 5 : 19 - 21) பொறாமை பாவத்தின் பட்டியலில் இடம் பெறுவதையும் நாம் அறிவோம். பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்? (ரோம 6 : 2). எனவே

பொறாமை என்கிற பாவத்தை விட்டு தேவனிடத்தில் அன்புள்ளவர்களாய் ஜீவிப்போம். அன்புக்குப் பொறாமை இல்லை (1 கொ. 13 : 14).

**காரணமில்லாத பொறாமைகள் :**

ராகேல் : ராகேல் தான் யாக்கோபுக்குப் பிள்ளைப் பெறாததைக் கண்டு தன் சகோதரியின் மேல் பொறாமை கொண்டு, யாக்கோபை நோக்கி எனக்கு பிள்ளை கொடும் இல்லாவிட்டால் நான் சாகிறேன் என்றாள். (ஆதி 30 : 31).

ராகேல் தன் சகோதரி லேயாள் மேல் பொறாமை கொண்டாள். காரணம் தனக்கு பிள்ளைகள் இல்லை. அவளுக்கோ பிள்ளைகள் பிறக்கிறதே என்று. இதோ பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம். கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன். (சங். 127 : 4) சாலொமோனின் பாடலின் படி பிள்ளைகள் பிறப்பது தேவனுடைய கரத்தில் இருக்க, ராகேலோ பொறாமையினால் யாக்கோபை எனக்கு பிள்ளைகள் கொடு என்றாள். எப்படி கொடுப்பான்?

நீங்கள் பிள்ளைகளுக்காக மற்றவர்கள் மேல் பொறாமை கொள்ளாமல் தேவனிடத்தில் காத்திருங்கள். உங்கள் விசுவாசமும் ஜெபமும் கண்டிப்பாக பலன் அளிக்கும். ஏற்ற நேரத்தில் கர்ப்பத்தின் கனியைக் கொடுப்பார்.

வானத்தையும், பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்தில் எனக்கு ஒத்தாசை வரும் சங். 121 : 2

**ஈசாக்கின் மேல் பெலிஸ்தர்களுக்கு உள்ள பொறாமை :**

அவனுக்கு ஆட்டு மந்தையும் மாட்டு மந்தையும் அநேக பணிவிடைக்காரரும் இருந்த படியினால் பெலிஸ்தர் அவன் பேரில் பொறாமை கொண்டார்கள் (ஆதி. 26 : 14). ஈசாக்கின் வளர்ச்சியைக் கண்ட ஜனங்கள் அவன் மேல் பொறாமை கொள்வதைப் பாருங்கள் நூறு மடங்கு பலன், ஆடு மாடுகள் பணிவிடைக்காரர்கள் இவைகளெல்லாம் பார்க்கும் போது பெலிஸ்தர்களுக்கு ஈசாக்கின் மேல் பொறாமை அதிகரித்தது.

இவைகளெல்லாம் எப்படி சம்பாதித்தான், இவனுடைய ஞானத்தினாலா? பெலத்தினாலா? அல்லது இவன் தகப்பனுடைய சொத்தா? இல்லை, இல்லவே இல்லை கர்த்தரின் ஆசீர்வாதத்தினாலே இது கிடைக்கிறது. ஈசாக்கு தேவனுக்கு உண்மையுள்ளவனாய் இருந்தபடியினால் உலக சம்பத்தாகிய இவைகளைக் கொடுத்தார்.

உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான். ஐசுவரியவான் ஆகிறதற்குத் தீவிரிக்கிறவனோ ஆக்கினைக்குத் தப்பான் (நீதி. 28 : 20). தேவனுக்குப் பயந்து உண்மையாய் ஜீவித்த ஈசாக்கிற்கு இவ்வளவு உலக ஆஸ்திகள் என்றால் இன்றைய புதிய ஏற்பாட்டின் படி உண்மையாய் நடக்க விரும்புவோருக்கு தேவன் தம்முடைய குமாரனையே கொடுத்திருக்கிறார். ஆம், தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்

கொடுத்தவர் அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி? (ரோமர் 8 : 32).

தேவன் கொடுக்க நினைத்ததை தடுக்க நினைப்பவன் யார்? உன்னையும் என்னையும் தம்முடைய இளைய குமாரனாக, குமாரத்திகளாக அழைத்த தேவன் சகலமும் அவர் சித்தத்தின்படி கொடுப்பார். எந்த பொறாமைகளும் தடை செய்ய முடியாது. தேவன் நம்மோடிக்கிறார்.

**யோசேப்பின் மேல் தன் சகோதர்களுக்கு உள்ள பொறாமை :**

அவன் சகோதரர் அவன் மேல் பொறாமை கொண்டார்கள். அவன் தகப்பனோ அவன் சொன்னதை மனதிலே வைத்துக் கொண்டான். (ஆதி 37 : 11). தனக்கு உண்டான சொப்பனத்தைக் குறித்து தன் தாய் தகப்பன் மற்றும் சகோதரர்களுக்கு சொன்னதினாலும் தன் தகப்பன் யோசேப்பை நேசித்ததினாலும் தன் சகோதரர் அவன் மேல் பொறாமை கொண்டார்கள். தன் சொந்த சகோதரன் மேலேயே பொறாமை கொண்ட இவர்களின் நிலையை (ஆதி 42-45). அதிகாரங்களை படிக்கும் போது நாம் உண்மையாகவே புரிந்து கொள்ள முடியும்.

தேவன் உன்னைக் கொண்டும் ஒரு காரியத்தை செய்ய நினைத்தால் நீ இடம் கொடுப்பாயா? பல பாடுகளை பட உன்னை ஒப்புக் கொடுப்பாயா? நீ தேவனுக்குத் தேவை. நீ தேவனுடைய கருவியாக இருக்க விரும்புகிறாயா? யோசேப்பின் தகப்பன் அவன் சொன்னதை மனதிலே வைத்துக் கொண்டது போல இந்த காரியங்களை மனதிலே வைத்து நீங்களும் யோசேப்பை போல தேவனுக்காய் பயன்படுங்கள். பொறாமை கொண்ட யோசேப்பின் சகோதரர்கள் முடிவில் யோசேப்பினால் பிழைக்கும்படி செய்தார். பொறாமை தேவ பிள்ளைகளை ஒன்றுமே செய்ய முடியாது. ஒருவனுடைய வழிகள் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால் அவனுடைய சத்துருக்களும் அவனோடேகூட சமாதானமாகும்படி செய்வார். (நீதி 16 : 7).

**முடிவுரை :**

.... பொறாமையோவென்றால் அதற்கு முன்னிற்கத்தக்கவன் யார்? (நீதி 27 : 4) அன்பானவர்களே இந்த சவாலான வார்த்தைக்கு உங்கள் பதில் என்ன? பொறாமை நம்மை விழுங்கி விடும். நம்மை ஆட்டிப் படைக்கும் என்றால் என்ன பொருள் ? நாம் இன்னமும் பொறாமை என்கிற பாவத்தின் கீழ் தான் இருக்கிறோம் என்று பொருள். ஒரு கிறிஸ்தவன் மட்டுமே பொறாமைக்கு எதிர்த்து நிற்க முடியும். நாம் உண்மையாகவே மனந்திரும்பி பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்துவின் சபையாராக இருந்தால் பொறாமை நமக்குள் இருக்காது. இருக்கவே இருக்காது. அப்படி பொறாமைபடுகிறோம் என்றால் நாம் கிறிஸ்தவர்கள் அல்ல. அவருக்கு அந்நியர்களே. நீங்கள் பொறாமையில்லாதவரா? அல்லது உள்ளவரா என்று இன்று தீர்மானியுங்கள்.

**L. மனாசேமண்ணு,**
சித்தூர், (A.P.)



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45 - 9.00 p.m.<br>9.00 - 9.15 p.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Sun, Mon<br>Tue, Thu | 2.00 - 2.15 p.m. | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore - 560<br>084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum - 695 034 | P.K. Varghese |



***Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures***

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

Postal Regn. No.TN / WR / ERD / 77 / 2003
Licensed to Post without pre payment
TN / WR / ERD / 03 / WPP /2003

Registered News Paper
RNI No. 47661 / 87 - New Delhi
Annual Subscription Rs.30/-

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக்
கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு

## ஓர் இனிய செய்தி

ஆம், மிகத் தேர்ந்தமுறையில் ஒழுங்கு செய்யப்பட்ட
அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில்
நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்
இது 15 பாடங்களைக் கொண்ட

## ஓர் இலவசப் பயிற்சி

இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு
சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,
த.பெ.எண்-27, காங்கயம் - 638 701.
தமிழ்நாடு, இந்தியா.

Published by Church of Christ, Kangayam
Printed at Konar Printers, Madurai - 625 012. Editor : S.Rajanayagam